# சமுதாய உற்பத்தித்திறன் வழிகாட்டல் தொகுப்பு

தேசிய உற்பத்தித்திறன் செயலகம்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
NPS SRI LANKA

## ஆலோசனை

கௌரவ ரஞ்சித் மத்தும பண்டார அவர்கள்
பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே அவர்கள்
பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்
திரு. ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர், பொதுநிர்வாக மற்றும் முகாமைத்து அமைச்சு

## வழிநடாத்தல்

ஜெ.எம். திலகா ஜயசுந்தர
பிரதி பணிப்பாளர், தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## மேற்பார்வை

டபிள்யூ. எம். டீ. சுரங்க குணரத்ன
பிரதி பணிப்பாளர், தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## ஆக்கம்

அகிலசுபசிங்ஹ (உதவிப் பணிப்பாளர், தேசிய உற்பத்தித்திறன் செயலகம்)

டாக்டர் ரஞ்சித் திசாநாயக்க (நிறுவனப் பொறுப்பு வைத்தியர் - பிராந்திய வைத்தியசாலை கட்டுகஹஹேன)
வெ.ப. விஜேரத்ன (இலங்கை நிர்வாக சேவை)
டபிள்யூ.டபிள்யூ. குலரத்ன (இலங்கை கல்வி நிர்வாக சேவை)

## ஒருங்கிணைப்பு

ருவன் பந்துஜீவ
எரந்தி ஹசிதா
நதீஜா டிசாந்தி
நுராகி குணவர்தன
கமல் கம்கானம்கே
சமன் ஜயசிங்க
இரேஷா ரனதேவ
நதீசா குருசிங்க

உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலகர்கள்
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## மொழிபெயர்ப்பு

எம்.எச்.எம். ராமிஸ்
பாராளுமன்ற உரைப்பெயர்ப்பாளர்


## வெளியீடு

தேசிய உற்பத்தித்திறன் செயலகம்
10வது மாடி,
செத்சிரிபாய, 2வது கட்டம்
பத்தரமுல்லை
தொலைபேசி: 0112186031 / 32
இணையத்தளம்: www.productivity.lk

## முதலாவது வெளியீடு

2016 டிசெம்பர்



முழுப்பதிப்புரிமை உடையது


ISBN 978-955-1378-28-8

# முகவுரை

இன்று இலங்கையில் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் விசேட கேந்திர நிலையமாக தேசிய உற்பத்தித்திறன் செயலகம் மாறியுள்ளது. நாட்டின் அபிவிருத்திக்காக அரசாங்க, தனியார், கல்வி மற்றும் சமுதாயத்துறைகளின் ஆக்கபூர்வமான பங்களிப்பு அத்தியாவசியமாக இருப்பதுடன் மேற்படி துறைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் விசேட பணியை தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் ஊடாக கடந்த தசாப்தம் முழுவதிலும் வெற்றிகரமாக நிறைவேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

தேசிய இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய பல்வேறு உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி செயலமர்வுகள், ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொடுக்கும் பணிகள் தேசிய உற்பத்திச் செயலகத்தினால் நிறைவேற்றப்படுகின்றன. இவை அதன் பிரதான செயற்பாடுகளில் சிலவாகும்.

இந்த உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களில் சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டம் விசேடமானதொரு நிகழ்ச்சித்திட்டமாக இருப்பதுடன் உற்பத்தித்திறன் எண்ணக்கருவை நாட்டில் கீழ் மட்டம் வரை கொண்டு செல்வதன் மூலம் சகல மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்பாட்டில் சமுதாயத்தினர் உச்சமட்டத்திலான பங்களிப்பை பெற்றுக் கொடுக்க முடியும் என்பதுடன் கிராமிய பொருளாதார வாய்ப்புக்களை இனங்காணல் மற்றும் அவற்றை அமுல்படுத்தத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும். சுகாதாரம், கல்வி மற்றும் வீட்டு அலகுகளில் பொருளாதாரத்தை வலுவூட்டல், வீண் விரயத்தை குறைத்தல், சேமிப்பதற்கு வழிகாட்டல்கள், எரிசக்தியை விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்தல் மற்றும் சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதே இந்த உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சகல உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களினதும் பங்களிப்பு மிகவும் விசேடமானதாக குறிப்பிடப்படக் கூடியது. உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களான உங்களுக்கு இந்த வழிகாட்டல் தொகுப்பு பெரும் உதவியாக இருக்குமென நான் நம்புகின்றேன்.

அவ்வாறே இந்த வழிகாட்டல் தொகுப்பை உருவாக்குவதற்கு பங்களிப்பை வழங்கிய சகல அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க இதனை வாய்ப்பாக கொள்கின்றேன்.

**ஜே. எம். திலகா ஜயசுந்தர**
பணிப்பாளர்
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

## சமுதாய உற்பத்தித்திறன் வழிகாட்டல் தொகுப்பு பற்றி.....

2020ஆம் ஆண்டளவில் "சகலருக்கும் உற்பத்தித்திறன்" எனும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நாட்டில் உள்ள சகல நகர்ப்புற மற்றும் கிராமிய சமுதாயத்தினரையும் உற்பத்தித்திறன் எண்ணக்கரு ஊடாக வலுவூட்டுவது மிக முக்கியமானதாக இருக்கிறது. தேசிய உற்பத்தித்திறன் செயலகமானது உற்பத்தித்திறன் எண்ணக்கருவை சமுதாயத்திற்கு கொண்டு செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தை ஏற்கனவே இனங்கண்டிருப்பதுடன் நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள உற்பத்தித்தின் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குடும்ப அலகுகளின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவது பற்றி கவனம் செலுத்தி பொருளாதார, கல்வி, சுகாதார மற்றும் பாதுகாப்பு, நடவடிக்கை முறைகள் மற்றும் சமூக அந்தஸ்து, கலாசாரம் மற்றும் ஆன்மீக வளர்ச்சி ஆகிய பிரதான துறைகளை உள்ளடக்கும் வகையில் பரந்தளவிலான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் நோக்கத்துடன் சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களை கிராமத்துக்கும் நகரத்துக்கும் கொண்டு செல்வதற்கு தேசிய உற்பத்தித்திறன் செயலகம் எதிர்பார்த்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை கிராமிய மற்றும் நகர்ப்பற சமுதாயத்தினரின் வீட்டு அலகுகளுக்கு கொண்டு செல்லும் பிரதான சக்தியாக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு நாட்டின் சகல மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் சேவையாற்றி வருகின்ற உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்கள் செயற்பட்டு வருவார்கள்.

இதன்போது அவர்களின் செயற்பணியை மென்மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் இந்த வழிகாட்டல் தொகுப்பு உருவாக்கப்படுவதுடன் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை சமுதாயத்திற்கு கொண்டு செல்லும்போது இந்த வழிகாட்டல் தொகுப்பு மிகவும் உதவியாக இருக்கும்.

நாட்டில் "நேற்றைய தினத்தைவிட நல்லதொரு இன்று - இன்றைய தினத்தைவிட நல்லதொரு எதிர்காலம்" என்பதைக் கட்டியெழுப்புவதற்காக உங்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பை தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு ஊக்கத்துடன் வழங்குவீர்கள் என வெகுவாக எதிர்பார்க்கின்றோம்.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் | 02 |
| 3. | பின்பற்ற வேண்டிய கோட்பாடுகள் | 04 |
| 4. | உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர் ஒருவருக்கு உரித்தான பணிகள் | 05 |
| 5. | உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர் ஒருவர் வளர்த்துக்கொள்ள வேண்டிய திறமைகள் | 06 |
| 6. | உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலருக்கு உள்ள இடைத்தொடர்பு வலையமைப்பு | 07 |
| 7. | உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர் ஒருவருக்கு உரித்தான வகிபாகங்கள் | 09 |
| 8. | சமுதாய உற்பத்தித்திறனை மேம்படுத்தும் போது உள்ளடக்கப்பட வேண்டிய பக்கத் தோற்றப்பாடுகள் | 12 |
| | 8.1. கல்வி | 12 |
| | 8.2. சுகாதாரமும் பாதுகாப்பும் | 13 |
| | 8.3. பொருளாதாரம் | 18 |
| | 8.4. நடைமுறை, சமூக நிலைமைகள் மற்றும் தொடர்புகள் | 20 |
| | 8.5. கலாசாரம் மற்றும் ஆன்மீகப் பண்புகளை உருவாக்கல் | 21 |
| 9. | சமுதாய உற்பத்தித்திறன் தரவுக்கட்டமைப்பு | 23 |
| 10. | அமுல்படுத்தும் முறையியல் | 31 |
| | 10.1. அறிமுகம் | 31 |
| | 10.2. சமுதாய உற்பத்தித்திறன் வழிப்படுத்தல் குழு | 32 |
| | 10.3. சமுதாய உற்பத்தித்திறன் படையணியை தாபித்தல் | 33 |
| | 10.4. சமுதாய உற்பத்தித்திறனுக்கு சமுதாய அடிப்படையிலான பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் | 39 |
| | 10.5. சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் | 41 |

| | | |
|---|---|---|
| 11. | சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தின் சுட்டிகள் மற்றும் செயற்றிட்டங்கள் | 44 |
| 12. | பயன்படுத்தக்கூடிய உற்பத்தித்திறன் கருவிகள் | 50 |
| | 12.1. பலம் பலவீனம் வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் (SWOT) பகுப்பாய்வு | 50 |
| | 12.2. முன்னேற்ற பரிசோதனை அட்டவணை (Check sheet) | 51 |
| | 12.3. ஹிஸ்டோகிராம் வரைபு (Histogram) | 51 |
| | 12.4. கட்டுப்பாட்டுக் குறிப்புக்கள் (Control chart) | 52 |
| | 12.5. பரேட்டோ வரைபு (Pareto Diagram) | 52 |
| | 12.6. பெறுபேறுகள் மற்றும் விளைவுகள் பற்றிய வரைபடம் (Cause & Effect Diagram) | 53 |
| | 12.7. ஆங்காங்கே பரந்துள்ள வரைபடம் (Scatter Diagram) | 53 |
| | 12.8. தரவுகளை வகைப்படுத்தல் (Data Stratification) | 54 |
| | 12.9. சிந்தனைக் கிளறல் (Brain Stroming) | 54 |
| | 12.10. இலக்குக் குழுக்களின் கலந்துரையாடல் (Focus Group Discussion) | 55 |

# சமுதாய உற்பத்தித்திறன் வழிகாட்டல் தொகுப்பு

## 1 அறிமுகம்

### *“நாட்டைக் கட்டியெழுப்பும் நிறைவான கிராமம்”*

சுபீட்சமிக்க பொருளாதார மற்றும் ஆன்மீக சூழலில் உயர் வாழ்க்கைத் தரத்திற்கு உரிமை கோருவதற்காக நாட்டுப் பிரஜைகளை ஒன்றுதிரட்டும் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முறையாக திட்டமிடப்பட்ட பூரணமான வேலைத்திட்டம் ஒன்று அத்தியாவசியமாகும்.

தங்கிவாழும் மனநிலையில் இருந்து விடுபட்டு தேசிய உற்பத்தி கொள்ளவை வளர்ப்பதற்காக பிரதேச ரீதியில் பரந்து காணப்படுகின்ற வளங்களை உச்சளவில் வினைத்திறனுடன் பயன்படுத்தத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்குகள் நிறைந்த கிராமிய சமுதாயத்தை உருவாக்குவதே இந்த யுகத்தின் அவசியத் தன்மையாகும். சமுதாய உற்பத்தித்திறன் எண்ணக்கருவை அமுல்படுத்துவதன் மூலம் குடும்பங்களில் வாழும் அங்கத்தவர்களின் மனப்பாங்குகளில் தெளிவான மாற்றம் ஏற்படும். அவ்வாறே மேற்படி அங்கத்தவர்களின் சுய ஒழுக்கம், கட்டுப்பாடு, நற்குணம் மற்றும் கூட்டாகச் செயற்படுவதை மேம்படுத்தும் பொருட்டு இந்த எண்ணக்கருக்கள் பெரும் ஒத்துழைப்பை வழங்கக்கூடியவையாக இருக்கின்றன.

வீட்டுப் பொருளாதார அலகுகளின் உற்பத்தித்திறனை உயர்மட்டத்திற்கு கொண்டு செல்வதானது ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையின் வளர்ச்சி வேகம் தொடர்பில் நேரடியாக சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது.



## 2 சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள்

1. நாட்டில் பயன்மிக்க கலாசாரத்தை உருவாக்குவதற்காக பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் ரீதியில் பலம்மிக்க சமூக அலகு என்ற வகையில் கிராமத்தைக் கட்டியெழுப்புதல்.

2. நிறைவான கிராமம் - பூர்த்தியான நாடு எனும் தொனிப்பொருளை யதார்த்தமாக மாற்றிக் கொள்ளும் பொருட்டு அமுல்படுத்தப்படுகின்ற சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து தேசிய வேலைத்திட்டம் ஒன்றாக சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

3. பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் கிராமிய அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்குகின்ற சகல வெளிக்கள அலுவலர்களையும் ஒன்றிணைப்புச் செய்து கூட்டான, பலம்மிக்க ஒருங்கிணைப்பபைக் கொண்ட பொறிமுறை ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

4. கிராமிய அபிவிருத்தியின் ஊடாக விளைதிறன்மிக்க கிராமம் ஒன்றைக் கட்டியெழுப்பும் பொறுப்பைக் கொண்டுள்ள கிராமிய சமுதாய உற்பத்தித்திறன் மேம்படுத்தல் படையணியை உருவாக்குதல்.

5. கிராமத்திற்குள் இனங்காணப்பட்டுள்ள வளங்களை அடிப்படையாகக் கொண்டு சுயசக்தியின் மூலம் எழுந்திருக்கும் கூட்டு மனநிலையை உருவாக்குதல்.

6. கிராமத்தை கைவிட்டு நகரத்திற்கு இடம்பெயரும் இளைஞர் சமுதாயத்தை கிராமத்திற்குள்ளேயே தங்கவைத்துக் கொண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வலுவூட்டல்.

அவ்வாறே இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதில் பங்களிப்புச் செய்கின்ற உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலரினால் சமுதாய உற்பத்தித்திறனை மேம்படுத்தும் செயற்பாடுகளை திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான திறமையை பெற்றுக்கொள்வதே இதன் மற்றொரு நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உங்களின் கவனத்தை செலுத்துவது மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நேரடியாக காரணமாக அமைகின்ற காரணிகளாகும்.

1. குடும்பம், சமுதாயம் மற்றும் பல்வேறு ஆட்களைக் கொண்ட குழுக்களை நிச்சயித்துக் கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளல்.

2. உற்பத்தித்திறன் மற்றும் தரம் தொடர்பில் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு காரணிகள் மற்றும் அவற்றுக்கு இடையே உள்ள தொடர்புகளை இனங்காணல்.

3. உற்பத்தித்திறன் மற்றும் தரம் தொடர்பில் தடையை ஏற்படுத்துகின்ற மற்றும் சிக்கல்கள் போன்றவற்றை இனங்காண்பதும் பகுப்பாய்வு செய்வதற்குமான ஆற்றலை பெற்றுக்கொள்ளல்.

4. குடும்பம், சமுதாய மற்றும் பல்வேறு குழுக்கள் மத்தியில் காணப்படுகின்ற சிக்கல்களில் முன்னுரிமை வழங்க வேண்டியசிக்கலை இனங்காணல்.

5. உற்பத்தித்திறன் மற்றும் தரம் சம்பந்தமான சிக்கல்களுக்கான பொதுவான நோக்கங்கள் மற்றும் விசேட நோக்கங்களை இனங்காண முடிதல்.

6. நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதில் தாக்கம் செலுத்தக் கூடிய வரையறைகள் மற்றும் தடைகளை இனங்காண்பதும் மீளாய்வு செய்வதும்.

7. நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு உகந்த உபாயமுறைகளை தெரிவுசெய்து கொள்ள முடிதல்.

8. மதிப்பீடு செய்யும் பணிகளை உள்ளடக்கிய செயற்றிட்டம் ஒன்றை தயார்செய்து கொள்ள முடிதல்.

9. செயற்றிட்டத்திற்கு ஏற்புடையவாறு கால அட்டவணை ஒன்றை தயார்செய்து கொள்ள முடிதல்.

10. பங்கேற்பு அணுகுமுறை ஊடாக சமுதாய படையணியின் ஆற்றல்களைப் பெற்றுக்கொள்ளல்.

11. தரப்பினர்களுக்கு இடையிலான உதவி பற்றிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளல்.

12. உருவாக்கிக் கொள்ளப்பட்ட திட்டத்தை விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கான திறமைகளை வளர்த்துக்கொள்ளல்.

13. இலக்காகக் கொள்ளப்பட்ட துறைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஐவித எண்ணக்கருக்களை பயன்படுத்திக் கொள்ளல்.

14. உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை கணக்காய்வு செய்யும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளல்.

அவ்வாறே குடும்பம் மற்றும் சமுதாயத்தின் உற்பத்தித்திறனையும் தரத்தையும் மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கு நேரடிப் பங்களிப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரிகள், முறையான மற்றும் முறைசாரா தலைவர்களை இனங்காணல், அவர்களுடன் சமூக உறவுகளை கட்டியெழுப்பிக்கொள்ளல், மேற்படி உறவுகளைப் பேணிவருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

## 3 பின்பற்ற வேண்டிய கோட்பாடுகள்

பொருளாதார மற்றும் சமூக ரீதியில் சாதகமான ஒரு மாற்றச் செயன்முறையை நோக்கி பயணிக்கும்போது அதற்காகப் பயன்படுத்த உத்தேசித்துள்ள சகல முறையியல்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

1. தரக்கோட்பாடு
2. உற்பத்தித்திறன் கோட்பாடு
3. சமூக மற்றும் பொருளாதாரக் கோட்பாடு
4. சுகாதார மற்றும் கல்விக் கோட்பாடு
5. சமய மற்றும் கலாசாரக் கோட்பாடு

நீங்கள் அமுல்படுத்த உத்தேசித்துள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக எதிர்பார்த்துள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேலே குறிப்பிடப்பட்ட கோட்பாடுகள் பற்றி தொடர்ச்சியாக கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணமான ஏதேனும் ஒரு நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு பூரணமான தர முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்துவது (Total Quality Management) தரக்கோட்பாட்டுக்கு ஏற்புடையதாக இருக்கும். அவ்வாறே குறித்த நிறுவனத்தில் ஐவித எண்ணக்கருவை அமுல்படுத்துவது உற்பத்தித்திறன் கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலரின் அனைத்து செயற்பாடுகளும், நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் கருத்திட்டங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பண்புகளை உள்ளடக்கியதாக இருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

1. ஏற்புடைய தன்மை (Specific)
2. அளவிடக்கூடியதாக இருத்தல் (Measurable)
3. அடையக்கூடியதாக இருத்தல் (Achievable)
4. யதார்த்தமானதாக இருத்தல் (Realistic)
5. கால அட்டவணையை கொண்டிருத்தல் (Timeliness)

## 4 உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர் ஒருவருக்கு உரித்தான பணிகள்

### 1. திட்டமிடல் (Planning)

அதாவது குறித்ததொரு எதிர்கால காலப்பகுதியில் அமுல்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை விளைதிறன்மிக்கவாறு நிறைவு செய்வதற்கு தாபிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பொருத்தமான உபாயமுறைகளை தீர்மானிப்பதாகும். வெற்றிகரமான திட்டமிடலின் மூலம் கருத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற வளங்களில் இருந்து உச்சளவான பயனைப் பெற்றுக்கொள்ள முடியுமாகும். நீங்கள் அடைந்து கொள்ள உத்தேசித்திருக்கின்ற இலக்குகளுக்கான பாதையை இந்த திட்டமிடலே உங்களுக்கு பெற்றுத்தரும்.

### 2. ஒழுங்குபடுத்தல் (Organizing)

கருத்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் கருத்திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே செயற்பாடுகள், அதிகாரம் மற்றும் வளங்களைப் பகிர்ந்தளிக்கும் செயன்முறையாகும்.

கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் ஆட்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பைச் செய்வதற்கு வளங்களின் வீண் விரயத்தை குறைத்து அவற்றை உச்சளவாக பயன்படுத்திக் கொள்வதற்கும் நல்லதொரு தொடர்பாடல் செயன்முறையை பேணிவருவதற்கும் ஒழுங்குபடுத்தல் காரணமாக அமையும்.

### 3. வழிநடாத்தல் (Leading)

அதாவது கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்துள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வழிகாட்டல் மற்றும் அவர்களை ஊக்குவிப்பதாகும். கருத்திட்டத்தை அமுல்படுத்தும்போது ஏற்படக்கூடிய பல்வேறு அசௌகரியங்களை இனங்கண்டு அவற்றை தவிர்த்துக் கொள்ளத் தேவையான நல்ல தீர்வுகளை உருவாக்குவதும் இதில் உள்ளடங்கும்.

### 4. கட்டுப்பாடு (Controlling)

அதாவது கருத்திட்டத்தின் உத்தேச நோக்கங்கள் அவ்வாறே நிறைவேற்றப்படுகின்றனவா என்பது பற்றி ஆராய்வதும் அவ்வாறு இடம்பெறாத பட்சத்தில் அதற்கு காரணமான விடயங்கள் பற்றி ஆராய்ந்து தேவையான சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதுமாகும்.

## 5 உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர் ஒருவர் வளர்த்துக்கொள்ள வேண்டிய திறமைகள்

### 1. எண்ணக்கரு சார்ந்த திறமைகள் (Conceptual Skills)

தற்கால மற்றும் முன்னைய காரணிகளை கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் எழக்கூடிய நிலைமைகளை மதிப்பீடு செய்து அதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி முன்னதாகவே தீர்மானங்களை மேற்கொண்டிருக்கக்கூடிய ஆற்றல்.

### 2. வெகுசன தொடர்பு ஆற்றல்கள் (Human relations Skill)

செயற்பாடுகளின்போது தம்முடன் தொடர்பு கொள்கின்ற ஏனைய தரப்பினர்களுடன் புரிந்துணர்வுடன் செயற்படக்கூடிய ஆற்றலாகும்.

குழுவாக செயற்படும்போது குழு அங்கத்தவர்களுடன் மிகவும் நல்ல நட்புறவையும் பண்பாட்டையும் கொண்டவராக செயற்படும் ஆற்றலை வளர்த்துக் கொள்வது உங்களுக்கு மென்மேலும் சாதகமான பெறுபேறுகளை உருவாக்கித்தரக் காரணமாக அமையும்.

### 3. நிர்வாக ரீதியான ஆற்றல்கள் (Administrative Skills)


கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது சம்பந்தமான சுற்றறிக்கைகள், நிதி ஒழுங்குவிதிகள், தாபன விதி உள்ளடங்கலாக ஏனைய சட்ட ரீதியான நிலைமைகள் பற்றிய அறிவைக் கொண்டவராக செயற்படுதல்.

### 4. தொழில்நுட்ப ஆற்றல்கள் (Technical Skills)


ஏதேனும் ஒரு பணியை மேற்கொள்ளும்போது அந்த நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தல் மற்றும் ஏனைய தேவைப்படுகின்ற நுட்ப ரீதியான திறமைகளை தம்மில் வளர்த்துக் கொள்வதற்குள்ள ஆற்றலாகும்.

(உதாரணமாக Computer Software, Multimedia, Power Point Presentation போன்றவற்றை பயன்படுத்துவது தொடர்பில் காணப்படுகின்ற அறிவைக் குறிப்பிடலாம்)

## 6 உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலருக்கு உள்ள இடைத்தொடர்பு வலையமைப்பு





ஏதேனும் ஒரு கட்டமைப்பின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை மிகவும் வளர்ச்சியடைந்த மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு கவனம் செலுத்த வேண்டிய மூலங்களாக இருப்பது.





- யாதாயினும் ஒரு கட்டமைப்பினால் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யும்போது பயன்படுத்தப்படுகின்ற சகல பௌதீக வளங்கள் மற்றும் கருவிகள் குறித்த கட்டமைப்பில் காணப்படுகின்ற வன்பொருட்கள் (hardware) என்றழைக்கப்படும்.

**உதாரணம்:** ஒரு நிறுவனத்தில் உள்ள கட்டிடங்கள், இயந்திர சாதனங்கள், பல்வேறுபட்ட தொழில்நுட்ப உபகரணங்கள், தளபாடம், மோட்டார் வாகனம் போன்றன.




- யாதாயினும் ஒரு கட்டமைப்பில் காணப்படுகின்ற பௌதீக வளங்கள் மேற்படி வளங்களை வழிநடாத்தும் ஆட்களினால் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தும்போது உருவாக்கப்படுகின்ற செயன்முறை மற்றும் அது சம்பந்தமான பிரதான மற்றும் உபசெயற்பாடுகள் Software மென்பொருள் என்று அழைக்கப்படும்.

மேற்படி செயன்முறைகள் மற்றும் செயற்பாடுகள் யாவை என்பது தனித்தனியாக இனங்காண்பதும் அவற்றை தொடர்ச்சியாக மேம்படுத்துவதும் மேற்படி கட்டமைப்பை மேம்படுத்தக் காரணமாக அமையும்.





மேலே குறிப்பிடப்பட்ட சகல கட்டமைப்புகள், கருவிகள், செயன்முறைகள் மற்றும் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டு அவற்றை வழிநடாத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற செயன்முறையில் ஈடுபடுகின்ற ஆட்கள் Humanware என்றழைக்கப்படுவார்கள்.

## 7 உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர் ஒருவருக்கு உரித்தான வகிபாகங்கள்

சமுதாய உற்பத்தித்திறனை மேம்படுத்தும் மையக் காரணியான உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர் ஒருவர் மேற்படி செயன்முறையில் ஈடுபடுவதற்காக செயற்பட வேண்டிய சில வகிபாகங்கள் இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் குறித்த சந்தர்ப்பங்களுக்கமைய தமது நடவடிக்கை முறைகள் மற்றும் வகிபாகங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதன் மூலமாக மிகச்சிறந்த விளைதிறன்மிக்க பெறுபேறுகளை உருவாக்கிக்கொள்ள முடியும்.

### 1. ஒருங்கிணைப்பாளராக (Coordinator)



சமுதாய உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச ரீதியில் அமுல்படுத்தும்போது அதற்கு அனுசரணை வழங்க முன்வருகின்ற அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள், ஆட்கள் மற்றும் உரிய வீட்டு அலகுகளுக்கிடையே தொடர்பை நல்ல முறையில் பேணிவருவது இதன்மூலம் கருதப்படுகின்றது.

### 3. ஒரு தலைவராக (Leadership)



பொது நோக்கம் ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக தமது குழுவில் உள்ள அங்கத்தவர்களை மிகவும் விளைதிறனும் வினைத்திறனுமிக்கவாறு வழிநடாத்துவது தலைமைத்துவமாகும்.

பயன்மிக்க ஒரு தலைவரில் வளர்த்துக் கொண்டு பேணிவர வேண்டிய நடத்தைசார் பண்புகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தேவையான பௌதீக மற்றும் மனிதவளங்கள் பற்றி அரச பொறிமுறையை அறிவுறுத்த முடிதல்.
- தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளல்.
- பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ளல், ஆவணமயமாக்கலை குறிப்பிட்டதொரு தனித்துவம்மிக்க வகையில் ஒழுங்குபடுத்திக் கொள்ளல் போன்ற செயற்பாடுகளின் மூலம் தொடர்பாடல் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளல்.

### 3. ஒரு புத்தாக்குநராக (Innovator)



யாதாயினும் ஒரு பணியை மேற்கொள்ளும்போது அதனை மிகவும் நல்ல முறையில் விளைதிறன்மிக்க புதிய தோற்றத்துடன் வினைத்திறனாக நிறைவேற்றுவது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நீங்கள் ஏதேனும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும்போது அதற்காகக் பயன்படுத்திக் கொள்ளும் முறையியல்களை எப்போதும் செயற்படும் நிலையில் பேணி வைத்திருப்பதற்காக புதிய கருத்துக்கள் எண்ணக்கருக்களை பயன்படுத்துவது அத்தியாவசியமான காரணியாகும்.


ஒரு புத்தாக்குநர் என்ற வகையில் தமது வகிபாகத்தை வழிநடாத்த வேண்டுமாயின் அதற்குத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்குகளை எப்போதும் தம்மத்தியில் வளர்த்துக் கொள்வதும் சம்பிரதாயபூர்வமான மற்றும் பாரம்பரிய கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு மிகவும் வெளிப்படையான குழப்பமற்ற மனநிலையுடன் செயற்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வது அவசியம்.

### 4. இலகுபடுத்துநராக (Facilitator)




பல்வேறு தரப்பினர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சமூகத் தொடர்பு வலையமைப்பின் அடிப்படையில் பொருள்சார், நிதிசார் அல்லது ஆலோசனைசார் வளங்களை பெற்றுக்கொள்வதற்கு உள்ள ஆற்றலாகும்.

### 5. வழிகாட்டுபவராக (Guide)




சமுதாய உற்பத்தித்திறன் மேம்படுத்தல் வேலைத்திட்டங்களின் உத்தேச நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதற்கு மிகச்சரியான வழிகாட்டல் வழங்குவது அவசியமாகும். இதன்போது வேலைத்திட்டத்தை அமுல்படுத்துகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிலுள்ள பலவீனங்களை இனங்கண்டு அதற்கு முறையான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் வெற்றிகரமான தன்மையை நோக்கி மேற்படி வேலைத்திட்டத்தை வழிப்படுத்த முடியும்.

தேவையான சரியான ஆலோசனைகள் மற்றும் பிரேரணைகளை பெற்றுக்கொடுத்தல், தேவையான சந்தர்ப்பங்களில் ஒரு பயிற்றுவிப்பாளராக செயற்படுதல், மிகவும் நெகிழ்வுத் தன்மைமிக்க நடைமுறையைப் பின்பற்றி சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் நேரடியான கவனத்தை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் விளைதிறன்மிக்க வழிகாட்டல் சேவையை பெற்றுக்கொடுக்க முடியும்.

### 6. இணக்கம் செய்பவராக (Arbitrator)




இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும்போது அது சம்பந்தமாக பல்வேறு தரப்பினர்கள் மத்தியில் நல்லதொரு பங்கேற்பு மற்றும் புரிந்துணர்வு காணப்படல் வேண்டும். எனினும் நடைமுறையில் குறித்த தரப்பினர்களுக்கு மத்தியில் பல்வேறு கருத்து முரண்பாடுகள், மோதல்கள் ஏற்படுவதானது தடுக்க முடியாத விடயமாகும்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை தொடர்பு கொண்டு மேற்படி கருத்து முரண்பாடுகளுக்கு காரணமாகின்ற காரணிகள் யாவை என்பதை அவதானித்து ஏதேனும் ஒரு பொது இணக்கப்பாட்டை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு இணக்கம் செய்பவர் என்ற வகையில் நீங்கள் தலையிட வேண்டி ஏற்படலாம்.

அது மாத்திரமன்றி வீட்டு பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும் ஆட்களில் காணப்படுகின்ற ஆளுமைப் பலவீனங்களை நீக்குவதற்கும் அவசியமாகின்ற ஆலோசனைகளை பெற்றுக்கொடுப்பதற்கும் ஆலோசனை சேவைகளை வழங்குகின்ற அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களை கிராமிய மட்டத்துடன் சம்பந்தப்படுத்துகின்ற தரப்பினராக செயற்படுவதும் இங்கு மற்றொரு பணியாக இருக்கின்றது.

## 7. முகவராக (Agent)



சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அரச பொறிமுறையை பிரதிநிதித்துவம் செய்து பிரதேச மட்டத்தில் செயற்படுவதும் பிரதேச அங்கத்தவர்களின் கருத்துக்கள், பிரேரணைகள் மற்றும் குற்றச் சாட்டுகள் பற்றிய அறிவுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் மேற்படி அங்கத்தவர்களை பிரதிநிதித்துவம் செய்வதும் இதன்மூலம் கருதப்படுகின்றது.

## 8. மதிப்பீட்டாளராக (Assessor)




சமுதாய உற்பத்தித்திறன் மேம்படுத்தல் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தும்போது அதிலுள்ள வளர்ச்சிகரமான நிலைமைகள் மற்றும் பின்னடைவுகளை அவதானிப்புச் செய்வதற்கும் தேவையான பின்னூட்டல்களை குடும்ப அங்கத்தவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கும் அந்த செயற்பாடுகள் அடிக்கடி மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதும் இடம்பெறுகின்றது.

இதன்போது விசேடமான தொழில்நுட்ப முறையியல்கள் ஊடாக வீட்டு உற்பத்தித்திறனை அளவிட்டு அவர்களை சரியான வழிமுறையில் வழிநடாத்த வேண்டும்.

## 9. மாற்றம் செய்பவராக (Change agent)



இந்த வேலைத்திட்டத்தின் இறுதிக் குறிக்கோளாக இருப்பது குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் காணப்படுகின்ற வாழ்க்கை மற்றும் சமூக நிலைமைகளை மென்மேலும் சிறந்த மட்டத்திற்கு கொண்டு செல்வதாகும்.

அவர்களிடம் தற்போது காணப்படுகின்ற மனப்பாங்கு, முறையியல் மற்றும் செயற்பாடுகளை பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தி மேற்படி நிலைமைகளில் மிகவும் சாதகமான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவது இதன்மூலம் கருதப்படுகின்றது.

## 8 சமுதாய உற்பத்தித்திறனை மேம்படுத்தும் போது உள்ளடக்கப்பட வேண்டிய பக்கத் தோற்றப்பாடுகள்

1. கல்வி
2. சுகாதாரமும் பாதுகாப்பும்
3. பொருளாதாரம்
4. நடைமுறையும் சமூக அந்தஸ்தும்
5. கலாசார மற்றும் ஆன்மீகப் பண்புசார் வளர்ச்சி

### 8.1. கல்வி



விளைதிறன்மிக்கவாறு சமூகத்தில் வாழ்வதற்கு ஆளொருவர் பெற்றுக்கொண்டுள்ள ஆற்றல்களை கல்வி என வெளிப்படுத்த முடியும். பிரதேச வாசிகளுக்கு மத்தியில் நீண்டகால அடிப்படையில் இடம்பெறுகின்ற சாதகமான நடத்தைசார் மாற்றத்தை நோக்கி பயணிப்பதற்காக அவர்களை ஊக்குவிப்பது இதன் ஒரு முக்கிய குறிக்கோளாகும்.

கல்வி என்பது பாலர் பாடசாலை, பாடசாலை மற்றும் அறநெறிப்பாடசாலை ஆகிய மூன்று துறைகளையும் உள்ளடக்கியிருப்பதுடன் அதன் சகல பிரிவுகளும் இங்கு கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இதன்போது வீட்டு அலகுகளில் மேற்படி கல்வித்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களை இனங்கண்டு அதனை மென்மேலும் முறைப்படுத்தி மேற்கொள்ளத் தேவையான வழிகாட்டல்களை அவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

அதற்காக அவர்களின் கல்வியறிவு மட்டம், தகவல் தொழில்நுட்ப முறைகள் சம்பந்தமாக காணப்படுகின்ற புரிந்துணர்வு மற்றும் விசேட திறமைகள் பற்றி விசேட கவனம் செலுத்தி செயற்பட வேண்டும்.

தொழில்சார் கல்வியின் மூலம் சிறந்த பயன்களை அடைந்து கொள்வதற்காக அதற்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக்கொடுக்கின்ற அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தகுதி வாய்ந்தவர்களை அதில் ஈடுபடுத்தல் வேண்டும்.

அவ்வாறே முறைசாரா கல்வியின் மூலம் ஆட்கள் தம்மத்தியில் வளர்த்துக் கொண்டுள்ள அறிவு, திறமை மற்றும் மனப்பாங்குகள் பற்றி விசேட கவனம் செலுத்துவதும் மிக முக்கியமானதாகும்.

**கல்விப் பிரிவில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

1. முறைசாரா கல்வியில் சிறுவர்களை ஈடுபடுத்தல்
2. வீடுகளில் வசிப்பவர்களின் எதிர்கால கல்வி எதிர்பார்ப்புக்களை இனங்காணல்
3. 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில், சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் போன்ற கல்விசார் பரீட்சைகளுக்கு பிள்ளைகளை ஊக்குவித்தல்.
4. சிறுவர்கள் மத்தியில் நற்பண்புகளை வளர்த்தல், சமயப் பின்னணியை ஏற்படுத்துவதற்கு அறநெறிப் பாடசாலைக் கல்வியில் ஈடுபடுத்தல்.
5. அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சிக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை கண்டுகளித்தல் மற்றும் நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு சிறுவர்களை ஈடுபடுத்தல்.
6. கல்விக்குள்ள நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் புதிய கல்விப் போக்குகள் பற்றிய புரிந்துணர்வை வளர்த்தல்.
7. முறைசாராக் கல்விப் பாடநெறிகளில் ஈடுபடுத்தல்.
8. மேலுள்ள விடயங்களை மாதாந்தம் மற்றும் மும்மாத அடிப்படையில் பகுப்பாய்வு செய்து வீடுசார் கல்வி மட்டங்களை அளவிட நடவடிக்கை மேற்கொள்ளல்.

## 8.2. சுகாதாரமும் பாதுகாப்பும்

**சுகாதாரம்**



தனிப்பட்ட ஆட்களின் சுகாதாரம் என்பது நோய்கள் ஒழிக்கப்படுவது மாத்திரமன்றி ஆட்களின் உடல், உளவியல் சமூகம் மற்றும் ஆன்மீக ரீதியில் நல்ல நிலைத்திருத்தலாகும்.

நாட்டை கட்டியெழுப்பும் நிறைவான கிராமம் எனும் எண்ணக்கருவை யதார்த்தமாக மாற்றிக் கொள்ளும்போது சுகாதாரமும் பாதுகாப்பும் என்பது அந்தப் பயணப்பாதையில் உள்ள பிரதானமான ஒரு திருப்புமுனையாகும். நாட்டின் உற்பத்திச் செயன்முறையை வலுவூட்டும்போது உடல், உள ரீதியில் ஆரோக்கியமான மனிதவளம் என்பது அத்தியாவசியமான காரணியாக உள்ளது.

அவ்வாறே ஒரு குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்கள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பத்தில் செலவிடுகின்ற தொகையின் அளவு நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களின் மூலம் சேமிப்பாக அதே குடும்பத்தில் தங்க வைத்துக்கொள்ள முடிவதுடன் அந்த குடும்பத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும் இது சாதகமான நிலைமையை உருவாக்கிக் கொடுக்கும்.

இங்கு நாம் கவனம் செலுத்த வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

- கர்ப்பிணித் தாய்மார், சிறுபிள்ளைகள், கட்டிளம் பருவத்தினர், முதியவர்கள் மற்றும் தேவையானவர்களை இனங்காணல்.

- போதைவஸ்து ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் போதைவஸ்துக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்.
- தவறான போஷாக்கு முறைகளில் இருந்து விடுவிக்கத் தேவையான அறிவுரைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சரியான போஷாக்கு முறைகளை அறிமுகம் செய்தல்.
- நல்ல சுகாதாரப் பழக்கங்கள் பற்றி சமுதாயத்தை அறிவுறுத்தல்.
- உடல் ரீதியான ஆரோக்கியத்தை முறையாகப் பேணிவரத் தேவையான உடற்பயிற்சி முறைகள் பற்றி சமுதாயத்தை அறிவுறுத்தல்.
- மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அதற்காக ஈடுபட வேண்டிய செயற்பாடுகள் பற்றி சமுதாயத்தை அறிவுறுத்தல்.

**சுகாதாரம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

1. நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக மேற்கொள்ளும் மாதாந்த செலவினம் எவ்வளவு?
2. நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவது எத்தனை தடவை இடம்பெற்றிருக்கின்றது?
3. மருத்துவ சிகிச்சைகளில் ஈடுபட்டுள்ள தடவைகளின் எண்ணிக்கை எவ்வளவு?
4. நோய்களைத் தடுப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை?
5. நோய்வாய்ப்பட்டவுடன் மருத்துவ சிகிச்சைகள் பெறப்படுகின்றதா?
6. வீட்டில் சிகிச்சைகள் பெற்றுள்ள தடவைகளின் எண்ணிக்கை எவ்வளவு?
7. சிறிய நோய் நிலைமைகளின் போது மருந்துகளை தயார் செய்துகொள்ளும் ஆற்றல் உள்ளதா?
8. நாளாந்த நடவடிக்கைகளில் சுகாதாரம் பற்றி கவனம் செலுத்தப்படுகின்றதா?
9. சமநிலையான உணவுவேளை பற்றி கவனம் செலுத்தப்படுகின்றதா?
10. உள்நாட்டு உணவுகள் பற்றி கவனம் செலுத்தப்படுகின்றதா?
11. குடும்ப மருத்துவர் ஒருவர் பற்றி கவனம் செலுத்தப்படுகின்றதா?
12. வீட்டில் ஏற்படுகின்ற மன அழுத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றதா?
13. சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பாக நீங்கள் கவனம் செலுத்தும் நிலைமை எவ்வாறானது?
14. போதைவஸ்து பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனை?

15. கழிவுப் பொருட்களை அகற்றுவது பற்றி பயன்படுத்தும் முறையியல் யாது?

16. விலங்குகளை வளர்த்தல் மற்றும் சுகாதாரம் தொடர்பிலுள்ள கவனம் எவ்வாறானது?

17. சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் உள்ளதா?

18. சுகாதார நிலைமைகள் பற்றி குடும்ப அங்கத்தவர்களின் தரவுகளை உள்ளடக்கிய கோப்பு ஒன்று பேணிவரப்படுகின்றதா?

19. நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பற்றி கவனம் செலுத்தப்படுகின்றதா?

20. மருத்துவ வசதிகள் வீட்டுக்கு அல்லது கிராமத்துக்கு அருகே காணப்படுகின்றனவா?

### பாதுகாப்பு



வீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது மனித மற்றும் பௌதீக வளங்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்துவது சம்பந்தமாக தொடர்ச்சியாக கவனத்துடன் செயற்படுவது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக பரவலாக இடம்பெறுகின்ற தீயினால் ஏற்படக்கூடிய எரிகாயங்கள், மின்சாரக் கசிவின் மூலம் இடம்பெறுகின்ற மின்சாரத் தாக்குதல்கள், செல்லப்பிராணிகள் கடித்தல் மற்றும் விசம் கலந்த பாம்புகளால் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வது தொடர்பில் சமுதாயத்தை வழிநடாத்துவது இதன் முக்கிய குறிக்கோளாகும்.

அவ்வாறானதொரு விபத்து இடம்பெறும்போது வழங்க வேண்டிய அடிப்படை முதலுதவிகள் தொடர்பில் அவர்களை அறிவுறுத்துவதற்கும் ஒரு வீட்டில் முதலுதவிப் பெட்டி ஒன்று அல்லது ஆகக்குறைந்தது குறித்த மருந்துகளை வைத்திருப்பதற்கு அல்லது வேறு குறித்ததொரு இடத்தை ஆயத்தப்படுத்தி வைத்திருப்பதற்கு அவர்களை வழிநடாத்த வேண்டும்.

அவ்வாறே பிரதேசத்தில் காணப்படுகின்ற அபாயகரமான இடங்களை இனங்காண்பதற்கும் மேற்படி இடங்கள் பற்றி சமுதாயத்தை அறிவுறுத்துவதற்கும் திடீர் அனர்த்தங்களின்போது ஒன்றுகூட வேண்டிய இடங்கள் பற்றி அறிவுறுத்துவதற்கும் செயற்படுவது மிக முக்கியமானதாகும். மேலும் பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைக்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற ஆட்கள் மற்றும் குழுக்களை இனங்காணல் மற்றும் அவர்களிடமிருந்து சமுதாயத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி நீங்கள் அறிந்து கொள்ளல் வேண்டும்.

### பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

1. பிரவேசப் பாதைகளின் பாதுகாப்பான தன்மை

2. பாதுகாப்பான வேலிகள் மற்றும் நுழைவாயில்கள் பற்றி கவனம் செலுத்தல்

3. வீட்டுக்கு அருகே உள்ள நிலப்பகுதியின் பாதுகாப்பான தன்மை

4. விபத்துக்கள் இடம்பெறக்கூடிய அண்மித்த சூழலின் தன்மை

5. பாதுகாப்பற்ற இடங்களின் தன்மை

6. வீட்டில் உள்ள யன்னல் கதவுகளின் பாதுகாப்பான தன்மை

7. மின்சாரக் கம்பிகளின் பாதுகாப்பான தன்மை

8. அனர்த்த நிலைமைகள் பற்றிய அறிவுபூர்வமான தன்மை

9. பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்கள் பற்றி அறிவுறுத்துவதற்குள்ள முறையியல்கள்

10. உயிர் மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

11. வீட்டு வன்முறைகள் ஏற்படுவதற்குள்ள சந்தர்ப்பங்கள்

12. பொது பாதுகாப்பு பற்றி செயற்படல்

13. சிறுவர் மற்றும் முதியவர்களின் உரிமைகள் பற்றிய அறிவு

சுகாதாரம் மற்றும் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்தும்போது எதிர்பார்க்கப்படுகின்ற பிரதான நான்கு நோக்கங்கள் காணப்படுகின்றன.

### 1. உடல்சார் சுகாதாரத்தை மேம்படுத்தல்

i. சமுதாயத்தை சரியான உணவுப் பழக்கத்திற்கு பழக்கப்படுத்தல் (அது தொடர்பாக சமுதாயத்தை அறிவுறுத்தல், போஷாக்கு நிகழ்ச்சித்-திட்டங்களை அமுல்படுத்தல், வீட்டுப் பயிர்ச் செய்கைகளில் அவர்களை ஈடுபடுத்தல்.

ii. சரியான உடல் ரீதியான செயற்பாடுகள்

iii. பாதகமான சுகாதார நடத்தைகளில் இருந்து தடுப்பதற்காக சமுதாயத்தை ஈடுபடுத்தல் (புகைபிடித்தல் மற்றும் ஏனைய போதைவஸ்து பயன்பாடு)

iv. நோய்களுக்கான சிகிச்சை பெறுவதற்கும் புனர்வாழ்வுக்கும் சமுதாயத்தை ஈடுபடுத்தல்

### 2. உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்தல்

இதன்கீழ் பின்வரும் உத்தேச இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- மன அழுத்தத்தை கட்டுப்படுத்தல் மற்றும் அதிலிருந்து விடுபடுவதற்கு அவர்களை வழிநடாத்தல்

- விளைதிறன்மிக்கவாறு ஓய்வுநேரத்தை கழிப்பதற்கு பழக்கப்படுத்தல்
- நல்லதாக அமையக்கூடிய மகிழ்ச்சியைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவர்களை ஈடுபடுத்தல்
- நேரமுகாமைத்துவம் பற்றிய அறிமுகம்

## 3. சமூக சுகாதாரத்தை மேம்படுத்தல்

இதன்போது பின்வரும் இலக்குகள் தொடர்பில் பிரதானமாக கவனம் செலுத்த வேண்டும்.

- சமாதானம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் சமுதாயத்திடம் உள்ள புரிந்துணர்வை மேம்படுத்தல்.
- பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல், பால்நிலைசார் சுகவாழ்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- ஒரு குடும்பத்தில் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் உள்ள புரிந்துணர்வை மேம்படுத்தல்
- ஆட்களுக்கு இடையிலான தொடர்புகளை மேம்படுத்தல்
- தொடர்பாடல் திறமைகளை மேம்படுத்தல்
- சுத்தமான வீட்டுத்தோட்டம், வீடு சுத்தமான மலசலகூடங்கள், குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் தற்போது காணப்படுகின்ற வசதிகளை மேம்படுத்தல்
- கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தல்
- சமூக ரீதியில் இடம்பெறுகின்ற தனிமைப்படல் பற்றி இனங்காண்பதும் அதற்கு நல்ல தீர்வுகளை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்துவதும்.

## 4. ஆன்மீக ஆரோக்கியத்தை மேம்படுத்தல்

இதன்கீழ் பின்வரும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு சமூகத்தை வலுவூட்டல் வேண்டும்.

- நல்ல சமய பழக்கவழக்கங்கள் சம்பிரதாயங்களை பழக்கப்படுத்தல்
- சமய சகவாழ்வை மேம்படுத்தல்
- கலாசார மரபுரிமைகளை பேணிவருவதற்கு பழக்கப்படுத்தல்
- நற்பண்புகளை மேம்படுத்தல்

## 8.3. பொருளாதாரம்



ஒரு வீட்டு அலகின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை வளர்ப்பதில் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தகவுதிறன் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்படுகின்றது. ஒரு வீட்டின் தேவைகளை பூர்த்தி செய்து மிகவும் சுபீட்சமான மட்டத்தை நோக்கிப் பயணிப்பது இதன் அடிப்படை குறிக்கோளாகும்.

பொருளாதார ரீதியில் வீட்டு அலகுகளை வலுவூட்டல், வீடுசார் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் தாக்கம் செலுத்துகின்ற ஏனைய சகல துறைகள் மற்றும் அவற்றின் துணை அளவுகோள்கள் தொடர்பில் மிகவும் சாதகமான காரணிகள் உருவாக்கப்படுகின்றன. அதற்கு விசேடமாக முக்கியத்துவம் பெறுகின்ற காரணிகளை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

### 1. ஒரு குடும்பத்தின் நாளாந்த வருமான நிலைமையை மேம்படுத்தல்

யாதாயினும் ஒரு குடும்பத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற அங்கத்தவர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்ற தொழில்வாய்ப்பின் மூலம் உழைக்கின்ற வருமானத்திற்கு மேலதிகமாக நாளாந்தம் மேலதிக வருமானம் ஒன்றை உழைத்துக் கொள்வதற்கு அவர்களை ஊக்குவித்தல். மற்றும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்துவது இங்கு பிரதானமாக கவனம் செலுத்தப்படுகின்றது.

- பிரதேசத்தின் பூகோள அமைவிடம் மற்றும் அங்கு தற்போது காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனிதவளங்களைப் பற்றி ஆராய்தல்
- குறித்த பிரதேசத்தில் வாழும் ஆட்களுக்கு உரித்தான விசேட ஆற்றல்கள் மற்றும் திறமைகளை இனங்காணல்
- பிரதேச மக்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பு கொண்டு செயற்படுகின்ற அரச மற்றும் தனியார் துறையுடனான தொடர்பு வலையமைப்பை கட்டியெழுப்பிக்கொள்ளல்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் இதற்குத் தேவையான அடித்தளத்தை உருவாக்கிக் கொள்ள முடியுமாகும்.

### 2. வளங்களின் வீண்விரயத்தை குறைத்தல்

இதன்போது வளப்பயன்பாட்டில் இடம்பெறுகின்ற வீண் விரயத்தைக் குறைத்தல் மற்றும் வளங்களில் இருந்து சிறந்த பயன்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

குறிப்பாக குடும்ப வருமானத்தை குறிப்பிடத்தக்களவான விகிதம் நிச்சயமாக ஒதுக்கப்பட வேண்டிய எரிசக்தி மூலங்களுக்கு செலவிடப்படுகின்றது. எரிசக்திக்காக

செலவிடப்படுகின்ற அந்த செலவினத்தை குறைக்கத் தேவையான அறிவுரைகளை வழங்குவது இதன் பிரதான நோக்கமாகும்.
அதற்காக,

- எரிபொருளை உச்சளவில் வினைத்திறனுடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தக் கூடிய சமையல் அடுப்புகளை அறிமுகம் செய்தல்.

- உயிர்வாயு அலகுகளை தாபிப்பதற்கு ஊக்குவித்தல்

- பயன்படுத்தப்படுகின்ற மின்சார அலகுகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள பங்களிப்புச் செய்கின்ற வீட்டு அடிப்படையில் முக்கியமான தொழில்நுட்ப முறையியல்கள் பற்றி அவர்களை விழிப்புணர்வூட்டல்.

## 3. வங்கி மற்றும் காப்புறுதி முறைகள் பற்றி அவர்களின் அறிவை வளஉத்தல்

- கிராமிய ரீதியில் காணப்படுகின்ற பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்வதற்காக அரச மற்றும் தனியார் துறை வங்கிகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் பற்றி இற்றைப்படுத்தப்பட்ட அறிவைப் பெற்றுக்கொள்ளல்.

- குறித்த நிறுவனங்கள் மற்றும் பிரதேச வாசிகளுக்கிடையில் தகவல்கள் மற்றும் அறிவைப் பரிமாற்றிக் கொள்ளும்போது இடைத்தரப்பினராக செயற்படுதல்.

- குடும்பங்களில் சேமிப்பு மற்றும் முதலீட்டை வளர்ப்பதற்கான பல்வேறுபட்ட சேமிப்பு முறையியல்கள் பற்றி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல்.

- காப்புறுதி எனும் எண்ணக்கரு பற்றி மக்கள் மத்தியில் காணப்படுகின்ற தவறான கருத்துக்களை அகற்றி அதன்மூலம் ஒரு குடும்பத்தின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்யக்கூடிய முறை பற்றி தெளிவான புரிந்துணர்வைப் பெற்றுக்கொடுத்தல்.

  அ. ஆட்கள் / திடீர் விபத்துக் காப்புறுதி
  ஆ. பயிர்க் காப்புறுதி
  இ. வர்த்தக வியாபாரக் காப்புறுதி

  போன்ற பலதரப்பட்ட காப்புறுதி முறைகள் தொடர்பில் தேவையான தரப்பினர்களுக்கு உரிய அறிவைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்தல்.

- பொருளாதார அளவுகோள்கள் தொடர்பில் கவனம் செலுத்தும்போது மேற்படி பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களை நல்ல முறையில் பயன்படுத்தி குடும்ப ரீதியாக அல்லது கூட்டாக இலக்கு சந்தையை நோக்காகக் கொண்ட பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்யும் செயன்முறை ஒன்றை திட்டமிடுவதை பிரதான குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும்.

- உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் கேள்வி நிலவுகின்ற பொருளாதார பயிர்கள், அழகிய மலர்கள், மூலிகைகள் போன்ற கருத்திட்டங்களை மேம்படுத்துவதற்கும் சுயதொழில் வாய்ப்புக்களை பரவலாக்கவும் தேவையான பின்னணியை உருவாக்கிக் கொடுப்பதும் முக்கியமானது.


- வீட்டில் உள்ள பெண்களின் ஊழியத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவது தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு உரித்தான மேலதிக ஊழியத்தை பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைக்கு நேரடியாக பங்களிப்புச் செய்துகொள்ளக்கூடிய வகையில் அதற்குத் தேவையான பிரேரணைகள் மற்றும் ஆலோசனைகளை தேவையான தரப்பினர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

## 8.4. நடைமுறை, சமூக நிலைமைகள் மற்றும் தொடர்புகள்

**நடைமுறைகள்**

சமுதாய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் வீட்டு உற்பத்தித்திறனை மேம்படுத்துவது அத்தியாவசியமான ஒரு காரணியாகும். பலதரப்பட்ட சூழல் நிலைமைகள் காணப்படுவது வீட்டு அங்கத்தவர்களின் மனநிலையை மென்மேலும் அமைதியாகப் பேணிவருவதற்கு பெறும் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. இதன்போது 5S முறையியலுக்கு அமைய ஒரு வீட்டை ஒழுங்கு செய்து கொள்வதற்கு கவனம் செலுத்துவது முக்கியமானது.

வீட்டு உற்பத்தித்திறன் கையேட்டை (www.productivity.lk) எனும் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.




**சமூகத் தொடர்பு**

சமூகத் தொடர்பு என்பது ஆட்களை ஊக்குவிப்பதில் தாக்கம் செலுத்துகின்ற பிரதானமான ஒரு காரணியாகும். சாதகமான சமூகத் தொடர்புகளை பேணிவரும் ஒருவர் பெரும்பாலும் திருப்தியான ஆளொருவராக இருப்பார். இது சமூகத்தின் வளர்ச்சிக்கு பெறும் தாக்கத்தை ஏற்படுத்தும். சமூக உறவுகளை பேணிவருகின்ற ஆளொருவர் தமது வீட்டு அலகுக்குள் மாத்திரம் முடங்கிக் கிடக்க முடியாது. இதன்மூலம் அவ்வாறு இருக்கும் போது அவர் சமூக வாழ்க்கை முறையிலிருந்து வெளியேறி செயற்பட வேண்டி ஏற்படும்.

கிராமம் என்ற வகையில் அன்னியோன்னிய உறவுகளுடன் பலம்மிக்கவாறு முன்னோக்கிச் செல்வதற்கு வழி உருவாக்கப்படுகின்றது. சமூக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக சமய நிறுவனங்கள், சங்கங்கள், அமைப்புக்கள், பொதுச் செயற்பாடுகளில் ஆட்களை தொடர்புபடுத்திக் கொள்வது அத்தியாவசியமாகும். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆயத்தப்படுத்திக் கொள்வது மிக முக்கியமானதாகும். இது பிரதேசத்தில் சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கும் அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கும் உதவியாக அமையும்.

## 8.5 கலாசாரம் மற்றும் ஆன்மீகப் பண்புகளை உருவாக்கல்

கிராமிய சமூகத்தை பொருளாதார ரீதியில் சாதகமான இலக்குகளை நோக்கி பயணிக்கச் செய்துவரும் காலப்பகுதியில் சமூக ரீதியில் வீழ்ச்சியொன்று சிலவேளை ஏற்பட முடியும் என்பது அறிந்த விடயமாகும்.

பிரஜைகளினால் சமூகத்துடன் செய்து கொள்ளப்படுகின்ற பல்வேறு செயற்பாடுகளின் போது அவர்களுக்கு மத்தியில் காணப்பட வேண்டிய சுய ஒழுக்கம், கட்டுப்பாடு மற்றும் பிறர்நலம் காத்தல் போன்ற பண்புகளை வெளிப்படுத்திக் கொள்வதற்காக அவரினுள் காணப்படுகின்ற ஆன்மீக உணர்வுகளை எழச்செய்தல் வேண்டும்.

குறிப்பாக சமய வழிபாட்டுத் தலங்களுடன் சகவாழ்வுடன் செயற்படுவதன் மூலம் ஆளொருவரின் உளவியல் சமநிலையை பேணிவருவதற்கு சாதகமான காரணிகள் உருவாக்கப்படுகின்றன.

அவ்வாறே படிப்படியாக எமது மக்களின் வாழ்க்கையிலிருந்து தூரமாகிச் செல்கின்ற மனிதநேயங்கள் மற்றும் கலாசாரத்தினால் எமக்குப் பெற்றுத் தந்துள்ள பெறுமானங்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் மென்மேலும் பேணிவருவதற்குமாக ஆட்களில் ஆன்மீக அபிவிருத்தியை ஏற்படுத்துவது அத்தியாவசியமான அம்சமொன்றாகும்.

பிரதேசத்தில் உள்ள குழுக்கள் பல்வேறுபட்ட சமூக சீர்கேடுகள் மற்றும் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போக்கினை ஒழிப்பதற்கும் தற்போது இருக்கின்ற அவ்வாறான ஆட்கள் மற்றும் குழுக்களை இனங்கண்டு முறையாக புனர்வாழ்வளிக்கும் செயன்முறையில் அவர்களை ஈடுபடுத்தி மீண்டும் அவர்களை சமூகமயப்படுத்துவதற்காகவும் ஆன்மீக நற்பண்புகளை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமானதாகும்.

இதன்போது பின்வரும் செயற்பாடுகள் தொடர்பில் உங்களின் கவனத்தை செலுத்த வேண்டும்.

- சமய வழிபாட்டுத் தலங்களுடன் சம்பந்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு வீட்டு அங்கத்தவர்கள் மத்தியில் காணப்படுகின்ற போக்கினையும் ஊக்கத்தினையும் மேம்படுத்தல்.

- பிரதேச மட்டத்தில் காணப்படுகின்ற கலாசார நிகழ்வுகள் மற்றும் வேறு நிகழ்வுகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவதற்கு பிரதேச மக்களை வழிநடாத்தல்.

- பிரதேசத்தில் வாழும் பாரம்பரிய சம்பிரதாயங்களை பாதுகாத்துக் கொண்டு வருகின்ற கலைஞர்களை இனங்காணல் மற்றும் அவர்கள் தொடர்பில் உரிய அரச நிறுவனங்களை அறிவுறுத்துவதன் மூலம் அவர்களை பாராட்டும் வேலைத்திட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தல்.

- சமூகத்தில் இருந்து படிப்படியாக தூரமாகி வருகின்ற இலக்கியம் மற்றும் ஏனைய கலை இரசனைத் திறமைகளை மீண்டும் தாபிப்பதற்காக சமுதாயப் பங்கேற்புடன் கிராமிய அலகுகளில் நூலக வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் கலை இரசனை நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தலை ஒழிப்பதற்காக சிறுவர் மகளிர் பணியகம், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து குறித்த பிரதேசங்களில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல் மற்றும் இவ்வாறான துஷ்பிரயோகங்கள் துர்நடத்தைகள் தொடர்பில் அறிவிக்கக்கூடிய நிறுவனங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் பற்றி சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டல்.

- பிரதேச செயலகங்களில் சேவையாற்றி வருகின்ற கலாசார அலுவலர், சமூக சேவை அலுவலர், பௌத்த அலுவல்கள் அலுவலர் போன்ற வெளிக்கள அலுவலர்களினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கும் அவர்களின் உதவி மற்றும் வழிகாட்டலுடன் பிரதேச மட்டத்தில் அமுல்படுத்தக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல்.

## 9 1.சமுதாய உற்பத்தித்திறன் தரவுக்கட்டமைப்பு

சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களை தயார்செய்து கொள்ள வேண்டிய மற்றும் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய ஆவணங்களின் மாதிரி அமைப்புக்கள் பின்வருமாறாகும்.

கிராமிய தகவல்களை www.productivity.lk எனும் இணையத்தள முகவரியூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

### 1. அடிப்படைத் தகவல்கள்

1.1. கிராமத்தின் பெயர்
1.2. கிராம அலுவலர் பிரிவு
1.3. குடும்ப சுகாதார சேவைகள் பிரிவு
1.4. சுகாதார அலுவலர் பிரிவு
1.5. கல்வி வலயமும் பிரிவும்
1.6. பொலிஸ் அதிகாரப் பிரிவு
1.7. பிரதேச செயலாளர் பிரிவு
1.8. உள்ளூராட்சி அதிகாரப்பிரதேசம்

### 2. கிராமிய அதிகாரப் பிரதேசத்தின் வரைபடம்

### 3. பூகோள அமைவிடம்

3.1. கிராமத்தின் நிலப்பிரதேசம் (சதுர கிலோமீற்றர்)

3.2. சுற்றாடல் ரீதியில் முக்கியத்துவமிக்க பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள்

- ஆறு, கால்வாய், நீரேந்து பரப்பு பிரதேசங்கள் (சதுர கிலோமீற்றர்)
- வனாந்தரங்கள் / மலைகள் (சதுர கிலோமீற்றர்)

3.3. தேயிலை, இறப்பர், தென்னை, நெல் மற்றும் ஏனைய பயிர்களைக் கொண்ட நிலப்பிரதேசம்

3.4. சுரங்கங்கள், அகழ்வுகள் போன்ற கைத்தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பிரதேசம்

### 4. சனத்தொகை (அடிப்படையான ஆண்டு)

4.1. மொத்த சனத்தொகை

- ஆண்களின் எண்ணிக்கை
- பெண்களின் எண்ணிக்கை

4.2. சனத்தொகையின் அடர்த்தி (சதுர கிலோமீற்றருக்கு)

4.3. வயதுப் பிரிவுக்கமைய சனத்தொகை

- 5 வருடங்களுக்கு குறைவான
- 6-18 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
- 19-39 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
- 40-59 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
- 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்

## 5. கிராமிய சுகாதாரம்

5.1 கிராமிய சுகாதார வசதிகளை வழங்கும் நிறுவனங்கள்

| வைத்தியசாலையின் முகவரி / தொலைபேசி இல. | நிறுவனத் தலைவரின் பெயர் / தொலைபேசி இல | ஊழியர்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மருத்துவர் | தாதிமார் | மருத்துவ உதவிச் சேவை | சிற்றூழியர் | வைத்தியசாலை நிர்வாக ஊழியர்கள் (உதா: எழுதுநர்) | சேவையின் தன்மை (மேற்கத்தேய மருத்துவம் / ஆயுர்வேதம் என்ற வகையில்) |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

5.2 சிறுவர் இல்லம் / முதியோர் இல்லம் / நிறவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் (உதா: செஞ்சிலுவைச் சங்கம்)

| நிறுவனத்தின் பெயர் / முகவரி | ஊழியர்களின் எண்ணிக்கை | | நிறுவனத் தலைவரின் பெயர் / தொலைபேசி இலக்கம் | நிறுவனத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## 6. கல்விசார் நிறுவனங்கள்

| இலக்கம் | நிறுவனம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | பயனாளிகள் | |
|---|---|---|---|---|
| | | | பெண் | ஆண் |
| 1. | பல்கலைக்கழகங்கள் | | | |
| 2. | உயர்தரம் வரை வகுப்பு நடைபெறும் பாடசாலைகள் | | | |
| 3. | சாதாரண தரம் வரை வகுப்பு நடைபெறும் பாடசாலைகள் | | | |
| 4. | 5ஆம் தரம் வரை வகுப்பு நடைபெறும் பாடசாலைகள் | | | |
| 5. | தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள் | | | |
| 6. | தொழிற்பயிற்சி நிறுவனங்கள் | | | |
| 7. | மேலதிக வகுப்புக்கள் | | | |
| 8. | அறநெறிப் பாடசாலைகள் | | | |

### பாலர் பாடசாலைகள்

| பாலர் பாடசாலையின் பெயர் / முகவரி / தொலைபேசி இலக்கம் | பாலர் பாடசாலையின் பிரதான ஆசிரியையின் பெயர் / தொலைபேசி இலக்கம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## பாடசாலைகள்

| பாடசாலையின் பெயர் / முகவரி / தொலைபேசி இலக்கம் | அதிபரின் பெயர் / தொலைபேசி இலக்கம் | பாடசாலை வகைப்படுத்தல் (கல்வி அமைச்சின் பாடசாலை வகைப்-படுத்தலுக்கு அமைய) | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| | | | | |
| | | | | |
| | | | | |

## தனியார் அல்லது சர்வதேச பாடசாலைகள்

| தனியார் அல்லது சர்வதேச பாடசாலையின் பெயர் / முகவரி / தொலைபேசி இலக்கம் | அதிபரின் பெயர் / தொலைபேசி இலக்கம் | பாடசாலை வகைப்படுத்தல் | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

| நிறுவனத்தின் பெயர் / முகவரி / தொலைபேசி இலக்கம் | நிறுவனத் தலைவரின் பெயர் / தொலைபேசி இலக்கம் | மாணவர்களின் எண்ணிக்கை | பதவியணியினர் | |
| --- | --- | --- | --- | --- |
| | | | கல்விசார் | கல்விசாரா |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**கல்வி மட்டத்துக்கு அமைய தொழிலின்மை**

| | பெண் | ஆண் |
|---|---|---|
| 1. 08 ஆம் தரம் சித்தியடைந்தோர் | | - |
| 2. க.பொ.த (சா/த) சித்தியடைந்தோர் - | | |
| 3. க.பொ.த. (உ/த) சித்தியடைந்தோர் - | | |
| 4. டிப்ளோமாதாரிகள - | | |
| 5. பட்டதாரிகள - | | |

## 7. எழுத்தறிவு வீதம்

7:1 கிராமிய சனத்தொகையின் விகிதமாக (%)

- பெண்களின் எழுத்தறிவு விகிதம்
- ஆண்களின் எழுத்தறிவு விகிதம்

## 8. துறைசார் அடிப்படையில் தொழில் பகிர்வு

1. அரச துறை
2. தனியார் துறை
3. சுய தொழில்வாய்ப்பு
   - விவசாயம்
   - கைத்தொழில்
4. வெளிநாட்டு வேலைவாய்ப்பு
5. சுரங்கம் / தோட்டங்கள் / கூலி வேலை
6. ஏனையவை

8:1 அரச துறை நிறுவனங்கள்

| அரச நிறுவனத்தின் பெயர் / முகவரி | ஊழியர் எண்ணிக்கை | | நிறுவனத் தலைவரின் பெயர் / தொலைபேசி இலக்கம் | நிறுவனத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

8:2 தனியார் துறை நிறுவனங்கள்

| தனியார் துறை நிறுவனத்தின் பெயர் / முகவரி | ஊழியர் எண்ணிக்கை | | நிறுவனத் தலைவரின் பெயர் / தொலைபேசி இலக்கம் | நிறுவனத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## 9. தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி கருத்திட்டங்கள்

| இல | கருத்திட்டம் | தற்போதைய நிலைமை | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

## 10. வீடுகளின் தகவல்கள்

10.1. கிராமத்தில் வாழும் மொத்தக் குடும்ப அலகுகளின் எண்ணிக்கை

10.2. மொத்த வீட்டு அலகுகளின் எண்ணிக்கை :
- நிரந்தர வீட்டு அலகுகளின் எண்ணிக்கை:
- குடிசைகள் மற்றும் சேரிகளின் எண்ணிக்கை:
- கூரை ஓடு அல்லது அஸ்பஸ்டோஸ் தகடுகள் பொருத்தப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை:
- நிலத்திற்கு சீமெந்து அல்லது டைல் (நில ஓடு) பதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை:
- தமது சொந்த வீட்டில் உள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை :

10.3. துப்பரவேற்பாட்டு வசதிகள்
- முத்திரையிடப்பட்ட மலசலகூடங்களைக் கொண்ட வீட்டு அலகுகள்:
- போச்சிகளைக் கொண்ட மலசலகூடங்கள் உள்ள வீடுகளின் எண்ணிக்கை:
- ஏனையன :

10.4. மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை

10.5. உணவு சமைப்பதற்காக
- கேஸ் பயன்படுத்தும் வீட்டு அலகுகள் :
- விறகு அடுப்புகளைப் பயன்படுத்தும் வீட்டு அலகுகள் :
- உயிர்வாயு பயன்படுத்தும் வீட்டு அலகுகள்:
- ஏனையன:

## 11. ஏனைய சேவைகள் மற்றும் வசதிகள்

11:1 வழிபாட்டுத்தலங்கள்

| இல | வழிபாட்டுத்தலம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பன்சலை | |
| 2. | பள்ளிவாசல் | |
| 3. | கோவில் | |
| 4. | ஏனையன | |

| வழிபாட்டுத் தலத்தின் பெயர் / முகவரி | வழிபாட்டுத் தலத்தின் தலைவரின் பெயர் / தொலைபேசி இலக்கம் | வழிபாட்டுத் தலத்தின் தன்மை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## 11:2 வர்த்தக நிலையங்கள் / நிறுவனங்கள்

| இல | வர்த்தக நிலையம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மொத்த வியாபாரக் கடைகள் | |
| 2. | சில்லறைக் கடைகள் | |
| 3. | பல்தொகுதி வர்த்தக நிலையங்கள் | |
| 4. | வெதுப்பகம் (பேக்கரி) | |
| 5. | ஹோட்டல் உணவுச்சாலை | |
| 6. | வாராந்த சந்தை | |
| 7. | மருந்தகம் (பாமசி) | |
| 8. | ஆடைக்கடைகள் | |
| 9. | ஏனையன | |

11.1. நூலகம் / வாசிப்புசாலைகள்

11.2. மகப்பேற்று மருத்துவமனைகள்

11.3. விளையாட்டு மைதானங்கள்

11.4. கலாசார நிலையங்கள்

11.5. ஏனையன

# 10 அமுல்படுத்தும் முறையியல்

## 10.1 அறிமுகம்

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு சேவையாற்றி வருகின்ற சகல உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் ஒவ்வொரு கிராமத்தை தெரிவுசெய்து நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதன்போது குறித்த கிராமத்தைத் தேர்ந்தெடுப்பதில் அவ்வவ் வீட்டு அலகுகள் பற்றி கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் ஏதேனும் நிரந்தர நிர்மாணிப்புக்களைக் கொண்ட வீடுகள் அல்லது சிறிய வீட்டுத்தோட்டம் காணப்படுகின்ற வீட்டு அலகுகளை நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேர்ந்தெடுப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தை கிராமத்தில் அமுல்படுத்தும்போது சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும் என்பதுடன் உற்பத்தித்திறன் எண்ணக்கருவை சமுதாயத்தினரிடம் கொண்டு செல்லும்போது மேற்படி அமைப்புக்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறே நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக குறித்த பிரிவின் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், கமத்தொழில் ஆராய்ச்சி அலுவலர் போன்ற அரசாங்க அலுவலர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

நிகழ்ச்சித் திட்டத்தை கிராமத்தில் அமுல்படுத்துவதற்காக சமுதாய உற்பத்தித்திறன் படையணி ஒன்றை தாபித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் உற்பத்தித்திறன் எண்ணக்கருவை கிராமத்தில் அமுல்படுத்தும் ஒட்டுமொத்த பொறுப்பும் இந்தப் படையணிக்கு கையளிக்கப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை அறிக்கையிடும் பொறுப்பு உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களுக்கு உரித்தானதாகும்.

பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

↓

தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

↓

மாவட்ட செயலகம்

↓

பிரதேச செயலகம்

↓

சமுதாய உற்பத்தித்திறன் வழிப்படுத்தல் குழு

↓

சமுதாய உற்பத்தித்திறன் படையணி

## 10.2 சமுதாய உற்பத்தித்திறன் வழிப்படுத்தல் குழு

இதன் உச்சளவான அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10-15க்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

சமுதாய உற்பத்தித்திறன் வழிப்படுத்தல் குழு, பிரதேச செயலாளரின் தலைமையில் இயங்கிவருவதுடன் குழுவைத் தாபிக்கும்போது பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர், சமுர்த்தி அலவலர், கமத்தொழில் ஆராய்ச்சி அலுவலர் மற்றும் பிரதேச செயலகத்தில் சேவையாற்றுகின்ற வெளிக்கள அலுவலர்கள், பிரதேச செயலகத்தில் உள்ள பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஏனைய அலுவலர்கள் உள்ளடங்கலாக சமுதாயத்தினருடன் நேரடியாக சம்பந்தப்பட்டு செயற்பட்டு வருகின்ற தரப்பினர்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

சமுதாய உற்பத்தித்திறன் வழிப்படுத்தல் குழுவின் பிரதான செயற்பணியாக இருப்பது சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடல், வழிநடாத்தல், வளப்பங்களிப்பு மற்றும் ஆலோசனை வழங்கல், நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மதிப்பீடு, முன்னேற்ற மீளாய்வு மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தத் தேவையான தலைமைத்துவத்தை பெற்றுக்கொடுப்பதாகும்.

ஆலோசனை மற்றும் வளப்பங்களிப்புக்கு இலக்காக கொள்ளும் பிரதான பக்கத் தோற்றப்பாடுகளை உள்ளடக்கும் வகையில் சம்பந்தப்பட்ட நிபுணர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் சமுதாய உற்பத்தித்திறன் வழிப்படுத்தல் குழுவில் உள்ளடக்கப்படுவார்கள்.

**கல்வித்துறை**

i. வலயக்கல்விப் பணிப்பாளர்கள்
ii. கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
iii. அதிபர்கள்
iv. ஆசிரியர்கள்

**சுகாதாரமும் பாதுகாப்பும்**

i. வைத்தியசாலைக்குப் பொறுப்பான வைத்தியர்கள், வைத்திய அலுவலர்கள்
ii. ஆயுர்வேத வைத்தியர்கள்
iii. வெளிக்கள சுகாதார அலுவலர்கள்
iv. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

**பொருளாதாரம்**

i. வங்கி மற்றும் காப்புறுதி அலுவலர்கள்
ii. சமுர்த்தி முகாமையாளர்கள் / சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள்
iii. தொழில் முயற்சியாளர்கள்
iv. கமத்தொழில் ஆராய்ச்சி அலுவலர்கள்

**நடைமுறை மற்றும் சமூக நிலைமை**

i. உற்பத்தித்திறன் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வளவாளர்கள்
ii. உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்கள்

**கலாசாரம் மற்றும் ஆன்மீக மேம்பாடு**

i. சமயத்தலைவர்கள்
ii. சிரேஷ்ட பிரஜைகள்
iii. அரசாங்க அலுவலர்கள், கலாசார அலுவல்கள் / பௌத்த அலுவல்கள் போன்றன.
iv. தொண்டர் அமைப்புக்களின் தலைவர்கள்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது கிராமத்தில் காணப்படுகின்ற சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் தலைவர்கள், அலுவலர்கள் மற்றும் அங்கத்தவர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் வேண்டும். உற்பத்தித்திறன் எண்ணக்கருவை கிராமத்திற்குள் அமுல்படுத்தும் போது இந்த சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது மிக முக்கியமானதாகும் என்பதுடன் அவ்வவ் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் அலுவலர்களையும் சமுதாய உற்பத்தித்திறன் வழிப்படுத்தல் குழுவில் உள்ளடக்கிக் கொள்வது முக்கியமானதாகும்.

## 10.3. சமுதாய உற்பத்தித்திறன் படையணியை தாபித்தல்

சமுதாய மட்டத்தில் சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சமுதாயத்தின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக சமுதாய உற்பத்தித்திறன் படையணியை தாபிப்பது முக்கியமானதாகும். குறிப்பாக உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் மேற்படி எண்ணக்கருக்களை கிராமத்தில் தாபிப்பதற்கு விரும்புகின்ற மற்றும் ஊக்கம் கொண்டுள்ள ஆட்களை இனங்கண்டு அவர்களை உள்ளடக்கிய ஆக்கபூர்வமாக செயற்படும் குழுவொன்று இந்த சமுதாய உற்பத்தித்திறன் படையணியில் உள்ளடக்கிக் கொள்ளல் வேண்டும்.

**நோக்கங்கள்**

- கிராமிய குடும்ப அலகுகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக படையணியை தாபித்தல் மற்றும் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பற்றிய அறிவு, முறையியல்கள் தொடர்பில் அவர்களை விழிப்புணர்வூட்டல், திறமைகளை கட்டியெழுப்பல் மற்றும் அதனூடாக இந்த படையணியை கிராமிய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான வகையில் பங்களிப்பை வழங்கச் செய்தல்.
- உற்பத்தித்திறன் எண்ணக்கருவின் ஊடாக கிராமிய குடும்ப அலகுகளின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்பல்.
- கிராமிய பொருளாதார வாய்ப்புக்களை இனங்காண்பதும் ஊக்குவிப்பதும்.
- புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்குத் தேவையான வழிகாட்டல்.
- கிராமிய வீட்டு அலகுகளில் சேமிப்பு, காப்புறுதி மற்றும் முதலீடு தொடர்பில் ஈடுபடுத்துவதும் தேவையான வசதிகளை பெற்றுக்கொடுப்பதும்.

**சமுதாய உற்பத்தித்திறன் படையணியின் பங்கேற்பின் வடிவங்கள்**

- ஊழியத்தைப் பெற்றுக்கொடுத்தல்
- நிதிசார் பலத்தை பெற்றுக்கொடுத்தல்
- உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கு செய்தல்
- தேவையான நிதிசார் பலத்தைப் பெற்றுக்கொடுத்தல்
- வீட்டு அலகுகளின் உற்பத்தித்திறன் எண்ணக்கருவை அமுல்படுத்துவதற்கு, ஆலோசனை வழங்குவதற்கு மற்றும் வீட்டு அலகுகளை அவதானிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள்

**சமுதாய உற்பத்தித்திறன் படையணியின் அங்கத்தவர்களை தெரிவுசெய்து கொள்ளல்**

இந்தப் படையணிக்கு ஆட்களை தெரிவுசெய்து கொள்ளும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

- நன்னடத்தையும் பண்பாடும் உடையவராக இருத்தல்
- ஆக்கபூர்வமாக முனைப்புடன் செயற்படுதல்
- ஏனையவர்களுக்கு சாதகமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆட்களாக இருத்தல்
- சமூகத்தில் வரவேற்பைப் பெற்ற ஒருவராக இருத்தல்

இங்கு பிரதான வழிப்படுத்துநர் என்ற வகையில் நீங்கள் முனைப்புடன் பங்களிப்பை வழங்குவது கருத்திட்டத்தை மென்மேலும் விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்த காரணமாக அமையும் என்பதுடன் அதற்காக பிரதேசத்தில் உள்ள நிறுவனங்கள் மற்றும் மக்களுடன் தொடர்புகொண்டு செயற்படுகின்ற சகல அரச அலுவலர்களினதும் உதவியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

கிராமத்தில் நிரந்தர வசிப்பாளர்களான கிராமத்தில் அங்கீகாரமும் வரவேற்பையும் பெற்றுள்ள தொண்டர் அடிப்படையில் வேலை செய்ய விரும்புகின்ற நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பொருளாதார நன்மைகளை எதிர்பார்க்காத,

- சமயத்தலைவர்கள் / பூசகர்கள் / மக்கள் தலைவர்கள்
- அதிபர்கள் / ஆசிரியர்கள்
- அரசாங்க அலுவலர்கள்
- ஓய்வு பெற்றவர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள்
- இளம் தலைவர்கள்
- இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்ற ஆக்கபூர்வமாக செயற்படும் குழுக்கள்

**சமுதாய உற்பத்தித்திறன் படையணி**

கீழ் மட்டத்தில் உள்ள இயங்கும் அலகுகள் அலகாக சமுதாய உற்பத்தித்திறன் படையணி உள்ளது. இதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 15-20 இடைப்பட்டிருத்தல் வேண்டும். சமுதாய உற்பத்தித்திறன் படையணி பின்வரும் அலுவலர்களை உள்ளடக்கி இருக்கும்.

1. தலைவர்
2. செயலாளர்
3. பொருளாளர்
4. பிரதான அமைப்பாளர் (இலகுபடுத்துபவர்)
5. அங்கத்தவர்கள்

இவர்களின் செயற்பணி பின்வருமாறாகும்.

1. **தலைவர்** - தலைவரானவர் பெரும்பாண்மையானோரின் விருப்பத்தின் அடிப்படையில் தெரிவுசெய்துகொள்ள வேண்டும். நெகிழ்வுத் தன்மைமிக்க ஒழுங்கு செய்யும் பலம் இருத்தல் வேண்டும். கிராமிய சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தை வழிநடாத்தும் தலைவராக இருப்பார். மாதத்தில் இரண்டு தடவையேனும் கூட்டங்களை நடாத்தி செயற்பட வேண்டும்.

2. **செயலாளர் -** அறிக்கைகளை பேணிவருதல் மற்றும் தேவையான தகவல்களை தலைவரிடம் சமர்ப்பிப்பதற்கு உதவுதல்.

3. **பொருளாளர் -** வரவு செலவுத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளை தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்வார். சமுதாய உற்பத்தித்திறன் படையணியின் சகல நடவடிக்கைகளின் போதும் நல்லதொரு நிதி முகாமைத்துவத்தை பேணிவருதல்.

4. **பிரதம அமைப்பாளர் -** (இலகுபடுத்துபவர்) பங்வேறு அம்சங்களையும் ஒழுங்கு செய்தல், தேசிய உற்பத்தித்திறன் செயலகம் மற்றும் படையணியை தொடர்புபடுத்தல்.

5. **அங்கத்தவர்கள் -** கூட்டங்களுக்கு வருகைதரல், கருத்திட்டங்களுக்கு உச்சளவில் ஒத்துழைப்பு வழங்குதல், பிரச்சினைகளை இனங்காணல், கருத்துக்களை பெற்றுக்கொடுத்தல், தேவைக்கேற்றவாறு ஆய்வுகள் மற்றும் அவதானிப்புக்களை நடாத்தல்.

**சமுதாய உற்பத்தித்திறன் படையணியின் மூலம் பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்ற செயற்பணி பின்வருமாறாகும்.**

- சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தலைமைத்துவம் வழங்குதல்
- அரசாங்க அலுவலர்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- வெளிப்படையான, ஒத்துழைப்பான சூழலை பேணிவருதல்
- சமுதாய உற்பத்தித்திறன் கருத்திட்டத்தில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தல்
- செலவினங்கள் மற்றும் தகவல்கள் பற்றி தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு தகவல்களை அறிக்கையிடல்
- படையணிக்குத் தேவையான பயிற்சித் தேவைகளை இனங்காண்பதும் பெற்றுக்கொடுப்பதும்
- படையணியை ஊக்குவித்தல்
- தொடர்பாடல் நடவடிக்கைகளை நிறைவேற்றல்
- தலையீடு செய்பவராக பிரகடனம் செய்தல்
- கிராமத்தில் உள்ள ஏனைய அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்
- உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர் மற்றும் மாவட்ட சமுதாய உற்பத்தித்திறன் அலுவலருடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய முன்மாதிரியான கருத்திட்டங்கள்

சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டம் ஒரு தனிமைப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக இருக்காதிருக்கும் பொருட்டு பொதுமக்களைக் கவரக்கூடிய உபாயமுறைகளின் மூலம் உயர் வாழ்க்கை அமைப்பைக் கொண்ட உளவியல் பலம்மிக்க மக்கள் வாழும் அபிவிருத்தி அடைந்த கிராமம் ஒன்றை ஏற்படுத்தும் பொருட்டு பின்வரும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்த முடியும்.

1. சமுதாய படையணியின் அங்கத்தவர்களின் முன்னெடுப்புடன் சகல வீட்டு அலகுகளையும் தொடர்புபடுத்திக் கொண்டு செய்ரி நாளொன்றை ஒழுங்கு செய்தல். இதனை அடுத்து 5Sஐ அமுல்படுத்தல் மற்றும் அதனைத் தொடர்ச்சியாக பேணிவருதல்.
2. உற்பத்தித்திறன் எண்ணக்கருவைப் பயன்படுத்தி கழிவுப் பொருட்கள் அற்ற பசுமைக் கிராமம் ஒன்றை உருவாக்குதல் இதற்காக நீண்டகால கருத்திட்டம் ஒன்றை தயார்செய்து அமுல்படுத்தல்.
3. பொருளாதார, சமூக, சுற்றாடல் நடவடிக்கைகள் தொடர்பான கருத்திட்டங்களை திட்டமிடுவதற்கு உற்பத்தித்திறன் எண்ணக்கருவைப் பயன்படுத்திக் கொள்ள உரிய தரப்பினர்களை ஊக்குவித்தல்.
4. தொண்டர் அமைப்புக்களை உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களின் மூலம் வலுவூட்டல்
5. உற்பத்தித்திறன் முகாம்களை ஒழுங்கு செய்தல் அதன் மூலம் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை பயன்படுத்தல்.

- கிராமிய சிக்கல்கள் மற்றும் போக்குகளை இனங்காணல்
- தீர்வுகளை உருவாக்குதல்
- அமுல்படுத்தல்
- கிராமிய அபிவிருத்திப் போக்குகளை இனங்காணல்
- நட்புறவை வளர்த்தல்

6. வீதி நாடகங்கள் அல்லது மேடை நாடகங்கள் மூலம் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நாடக குழுவொன்றை ஒழுங்கு செய்தல் (சமுதாயம் மற்றும் நிறுவனங்களின் கவனத்தை வென்றெடுத்தல், முக்கிய விடயங்கள் பற்றி விழிப்புணர்வூட்டல்)

- நல்ல பழக்கவழக்கங்கள்
- கிராமிய சூழல் மாசடைவதை தடுத்துக் கொள்ளும் முறை

- பொருளாதார விடயங்கள்
- மோதல்களைக் குறைத்துக் கொள்ளல்
- மிக எளிமையான வாழ்க்கை முறை

7. அனர்த்தங்களை இனங்காணல், முன்னாயத்தம், தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒழுங்குபடுத்த வேண்டியதன் தேவையை ஏற்படுத்தல் அதற்காக உரிய தரப்பினர்களை உற்பத்தித் திறன் எண்ணக்கருக்களின் மூலம் வலுவூட்டல்.

8. கிராமத்திற்கு முக்கியமான தரவுத்தகவல் கட்டமைப்பை பேணிவருதல், மேம்படுத்தல், தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொடுத்தல். இதற்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வசதிகள் கிராமத்தில் உள்ள சந்தர்ப்பங்களில் உரிய தரப்பினர்களை ஊக்குவித்தல்.

9. சிறுவர் கழகங்கள், உற்பத்தித்திறன் கருவிகளின் மூலம் வலுவூட்டப்படல் மற்றும் எண்ணக்கருக்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல்.

   - குறுந்திரைப்படங்களை உருவாக்குதல்
   - கிராமத்தைச் சுற்றி சிறிய சுற்றுப் பயணங்களை ஒழுங்கு செய்தல்
   - பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
   - மாதிரி நூலகங்களை ஏற்படுத்துதல்

10. கிராமிய அபிவிருத்தி கருத்திட்டங்களில் தலைமை தாங்கி ஒருங்கிணைப்பு வகிபாகத்தை நிறைவேற்றல் .

**நீங்கள் அமுல்படுத்த உத்தேசித்துள்ள சகல நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்**

1. பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
2. பயன்பெறுபவரை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. பயன்பெறுபவர் திருப்தியடைதல் வேண்டும்.
4. நிலைபேறான அபிவிருத்திக்கு வழிகாட்டும் வேலைத்திட்டமாக இருத்தல் வேண்டும்.
5. சாதகமான மாற்றத்தை உருவாக்க வேண்டும்.
6. சட்டரீதியான சட்டகத்துக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

## 10.4. சமுதாய உற்பத்தித்திறனுக்கு சமுதாய அடிப்படையிலான பங்களிப்பை பெற்றுக் கொள்ளல்

சமுதாய அடிப்படையிலான அமைப்பு என்பது பொதுவாக அல்லது தனிப்பட்ட வகையில் இலாபம் எதிர்பார்க்காது சமூக, பொருளாதார, சுற்றாடல் போன்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் ஒன்றுகூடியுள்ள ஆட்களைக் கொண்ட குழுவாகும்.

சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் ஊடாக குறைந்த செலவினத்தில் அதிக பயன்களை அடைந்து கொள்வதற்கு அவற்றின் அங்கத்தவர்களுக்கு ஆற்றல் கிடைக்கின்றது.

ஒரு கிராமத்தில் உள்ள சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை பின்வருமாறு நாம் குறிப்பிட முடியும்.

1. நலன்புரிச் சங்கம்
2. சமுர்த்தி சங்கம்
3. மரண உதவிச் சங்கம்
4. கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம்
5. கமத்தொழில் சங்கம்
6. சனசமூக சங்கம்
7. மகளிர் சங்கம்
8. இளைஞர் கழகம்
9. சிறுவர் கழகங்கள்
10. விளையாட்டுக் கழகங்கள்

மேற்குறிப்பிட்ட சங்கங்கள் வரலாற்றுக் காலம் முதல் பல்வேறு பெயர்களில் ஒழுங்குபடுத்தப்பட்டு கிராமத்தில் வியாபித்திருந்தன.

கிராமிய மட்டத்தில் ஆக்கபூர்வமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களில் செயல்ரீதியான பிரதிநிதித்துவத்தை சமுதாய உற்பத்தித்திறன் படையணிக்குத் தேர்ந்தெடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதுடன் அவர்கள் ஊடாக முனைப்புடனான பங்களிப்பு இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது அடிப்படை பணிகளாக சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுக்கு சமுதாய உற்பத்தித்திறன் படையணியுடன் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

- நிதி முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
- உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை அறிமுகம் செய்தல்
- 5S எண்ணக்கரு பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுத்தல்
- பசுமை உற்பத்தித்திறன் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுத்தல்
- வீட்டு உற்பத்தித்திறன் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுத்தல்

- நவீன கமத்தொழில் முறையியல்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுத்தல்
- சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை பொருளாதார அலகுகளாக வலுவூட்டல்
- வாழ்வாதார அபிவிருத்தி

மேலுள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மென்மேலும் விஸ்தரித்து பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கும் அதனைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுக்கு தனித்துவமிக்க அங்கத்தவர்களின் பொறுப்புக்களை மென்மேலும் வெற்றிகரமாக அமுல்படுத்தும் ஆற்றல் கிடைக்கும்.

5S எண்ணக்கருவின் மூலம் நாளாந்த வாழ்க்கையின் வேலைகளை இலகுவாகவும் தெளிவாகவும் மேற்கொள்வதற்கும் பசுமை உற்பத்தித்திறனின் மூலம் சுற்றாடலைப் பாதுகாத்து மேம்படுத்தலைப் பெற்றுக்கொள்ளும் முறையையும் கைசன் எண்ணக்கருவைப் பயன்படுத்தி தற்போதுள்ள நிலைமையை வரையறைகளுக்குள் மேற்கொள்ளக்கூடிய நிலைமையை மேம்படுத்துவது பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்கும் ஆற்றல் கிடைக்கும்.

அவ்வாறே வீட்டு உற்பத்தித்திறன் எண்ணக்கருவைப் பயன்படுத்தி வீட்டு அலகுகளை மேம்படுத்துவதற்கும் கிராமத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் அதன்மூலம் பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ள முடியும். நவீன கமத்தொழில் முறையியல்கள் பற்றிய புரிந்துணர்வை பெற்றுக்கொடுப்பதன் மூலம் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் அதுபற்றி விருப்பம் கொண்டுள்ள சகலருக்கும் குறைந்த வசதிகளில் குறைந்த செலவினத்தில் குறுகிய காலத்தில் கூடுதல் விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வழியை உருவாக்கிக்கொள்ள முடியும்.

சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுக்கு கிராமிய ரீதியில் பொருளாதார அலகாக முக்கிய செயற்பணியொன்றை நிறைவேற்ற முடியும். இதன்போது கிராமத்தில் உள்ள பௌதீக மற்றும் மனித வளங்களை நல்ல முறையில் இனங்கண்டு மேற்படி வளங்களை மிகவும் பயன்மிக்கவாறு பயன்படுத்திக்கொள்ள செயற்பட முடியும். இங்கு கிராமத்தில் உள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை இனங்கண்டு அவற்றை பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளல் போன்ற பொருளாதார ரீதியில் நன்மை பயக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவது பற்றி ஆராயப்படும்.

கிராம வாசிகளின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வது சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் ஊடாக மேற்கொள்ளக்கூடிய மற்றொரு நடவடிக்கையாகும். வீட்டின் பிரதான வருமான வழிமுறைக்கு மேலதிகமாக வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு குடும்ப அங்கத்தவர்களை ஊக்குவிப்பதும் அதற்குள்ள வாய்ப்புக்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து அவற்றை அமுல்படுத்த ஒத்துழைப்பை வழங்குவதும் இந்த விழிப்புணர்வூட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட முடியும்.

மேலே குறிப்பிடப்பட்ட சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்கள், சிறியளவிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் அவற்றுக்குத் தேவையான மூலப்பொருட்கள், ஊழியம் மற்றும் இடங்களை இனங்காண்பதற்கும் இது வழிகாட்டும். அதன் ஊடாக புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் சந்தையை கிராமத்தில் உருவாக்கும் ஆற்றல் கிடைக்கும்.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி தமது அமைப்பின் அங்கத்தவர்களை விழிப்புணர்வூட்டும் பொறுப்பு சமுதாய அடிப்படையிலான படையணிக்கு தெரிவுசெய்து கொள்ளப்படுகின்ற தலைவர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருப்பதுடன் இங்கு சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களில் உள்ள ஏனைய அங்கத்தவர்களுக்கு அதன் மூலம் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பற்றிய அடிப்படை புரிந்துணர்வை பெற்றுக்கொள்ளும் ஆற்றல் கிடைக்கும்.

இதற்கு மேலதிகமாக சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கு உள்ள ஆற்றல்கள் மற்றும் தேவைகளை சமுதாய உற்பத்தித்திறன் படையணியுடன் சம்பந்தப்படுகின்ற பிரதிநிதிகளூடாக கேந்திரப்படுத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். அதன்மூலம் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு சமுதாய அடிப்படையிலான அமைப்பினதும் அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கை மட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

## 10.5. சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள்

இதனை இரண்டு பகுதிகளாகப் பிரிக்க முடியும்.

1. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை பிரபல்யப்படுத்துவதற்கான மேம்படுத்தல்கள்

2. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மேம்படுத்தல்கள்

**பிரபல்யப்படுத்தல்**

இதன்மூலம் கருதப்படுவது சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தை கிராமத்திற்குள் அமுல்படுத்தும் முன்னர் அதுபற்றி விழிப்புணர்வூட்டத் தேவையான மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

இதன்கீழ் சுவரொட்டிகளை வடிவமைத்தல், பதாதைகளை வடிவமைத்தல், அறிவித்தல் பலகைகளை தயார்செய்தல், துண்டுப் பிரசுரங்களை அச்சிடுதல் மற்றும் வீடியோ குறுவட்டுக்களை தயார்செய்தல்.

இந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக சங்கங்கள், அமைப்புக்கள் மற்றும் குழுக்களை விழிப்புணர்வூட்டுவதன் மூலமும் இந்த நிகழ்ச்சித் திட்டம் பற்றி கிராமத்தை ஆயத்தப்படுத்த முடியும்.

**அமுல்படுத்தல்**

இதன்போது நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லத் தேவையான அறிவைப் பெற்றுக்கொடுத்தல், ஆலோசனை, ஊக்குவித்தல் மற்றும் மதிப்பீடு ஆகிய செயன்முறைகளை மேற்கொள்ளத் தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதற்கான மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1. எண்ணக்கருக்கள் பற்றிய சுவரொட்டிகளை வடிவமைத்தல்

2. மேம்படுத்தல் அம்சங்களை வடிவமைத்தல் (தொப்பி, பேனா, பென்சில், புத்தகம், டோர்ச் போன்றன).

3. வீட்டு அலகுகளுக்கு மேம்படுத்தல் அம்சங்களை வடிவமைத்தல் (பல்வேறு நிறுவனங்களுக்கான கோப்புகளை தயார்செய்தல், பல்தேவை புத்தகங்களை உருவாக்குதல், கலண்டர் நாட்காட்டிகளை வடிவமைத்தல், வர்த்தகப் பைகளை வடிவமைத்தல் போன்றன).

இதற்கு மேலதிகமாக சமுதாய உற்பத்தித்திறன் படையணியினால் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேவையான ஆக்கபூர்வமான மேம்படுத்தல் அம்சங்களை தயார்செய்வதையும் இதற்குள் கொண்டுவர முடியும். மேலும் பிரதேசத்தில் உள்ள கொடைவல்லுநர்கள், கொடை வழங்குநர்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உதவிகளைப் பெற்றுக்கொள்வதும் முக்கியமானதாகும்.


3R முறை என்றால் என்ன?
Reduce - பாவிப்பதைக் குறைத்தல்
Reuse - மீண்டும் பாவித்தல்
Recycle - மீள் சுழற்சி செய்தல்
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்


நாம் 3R முறைக்குப் பழகிக்கொள்வோம்
Reduce
பாவிப்பதைக் குறைப்போம்
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்


நாம் 3R முறைக்குப் பழகிக்கொள்வோம்
Reuse
மீண்டும் பாவிப்போம்
வீட்டில் மீண்டும் பாவிப்போம்
அலுவலகத்தில் மீண்டும் பாவிப்போம்
சமூகத்தில் மீண்டும் பாவிப்போம்
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்


நாம் 3R முறைக்குப் பழகிக்கொள்வோம்
Recycle
மீள் சுழற்சிக்கு உட்படுத்துவோம்
மீள்சுழற்சி
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்


உற்பத்தித்திறன்
விரயங்களைத் தடுத்து
சிறந்த முன்னேற்றத்தைக்
கொண்டு வரும்
5S
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## 11 சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டத்தின் சுட்டிகள் மற்றும் செயற்திட்டங்கள்

### அளவுகோள் பட்டியல்

| இல. | தகவு திறன் | அடிப்படையான ஆண்டின் பெறுமானம் | குறித்த ஆண்டின் பெறுமானம் | மூலம் |
|---|---|---|---|---|
| 1. | கிராமிய சனத்தொகை | | | |
| 2. | பிறப்பு விகிதம் | | | |
| 3. | மரண விகிதம் | | | |
| 4. | சனத்தொகை வளர்ச்சி வேகம் | | | |
| 5. | பிரதேசத்தில் காணப்படுகின்ற பிரதான சிக்கல்கள்<br>I. குடிநீர் இல்லாத குடும்ப வீட்டு அலகுகளின் எண்ணிக்கை<br>II.<br>III.<br>IV.<br>V. | | | |
| 6. | எழுத்தறிவு விகிதம்<br>பெண் %<br>ஆண் % | | | |
| 7. | க.பொ.த (சா/த) வரை கல்வி பயின்றோர்<br>பெண் %<br>ஆண் % | | | |
| 8. | க.பொ.த. (உ/த) சித்தியடைந்தோர்<br>பெண் %<br>ஆண் % | | | |
| 9. | உயர்கல்வி பெற்றுள்ளோர்<br>பெண் %<br>ஆண் % | | | |
| 10. | நிரந்தர தொழில் உள்ளவர்கள்<br>பெண் %<br>ஆண் % | | | |

| இல. | தகவு திறன் | அடிப்படையான ஆண்டின் பெறுமானம | குறித்த ஆண்டின் பெறுமானம் | மூலம் |
|---|---|---|---|---|
| 11. | ஒரு வீட்டின் நடுத்தர வருடாந்த வருமானம் | | | |
| 12. | துப்பரவேட்பாட்டு நீர் வசதிகளைக் கொண்ட வீடுகள் % | | | |
| 13. | துப்பரவேட்பாட்டு மலசலகூட வசதிகளைக் கொண்ட வீடுகள் % | | | |
| 14. | மின்சார வசதியுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | | | |
| 15. | வீடுகள் இல்லாத குடும்ப அலகுககளின் எண்ணிக்கை % | | | |
| 16. | வீட்டுத்தோட்டம் உள்ள வீடுகளின் எண்ணிக்கை % | | | |
| 17. | பொருளாதார பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை % (தேயிலை இறப்பர் தெங்கு) | | | |
| 18. | உற்பத்தித்திறன் எண்ணக்கருவை அமுல்படுத்தும் வீட்டு அலகுகளின் எண்ணிக்கை (5S, 3R போன்றன) | | | |
| 19. | வங்கி கணக்கு உரித்தான ஆட்களின் எண்ணிக்கை | | | |
| 20. | வீட்டுக் கைத்தொழில் அல்லது சுயதொழில் வாய்ப்பில் ஈடுபட்டுள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை | | | |
| 21. | கைத்தொழில் (பாரிய) வேறு முதலீடுகள் உரித்தான குடும்ப அலகுகள் | | | |
| 22. | காப்புறுதிக்கு உரிமை கோரும் ஆட்களின் எண்ணிக்கை | | | |
| 23. | தொற்றாத நோய்களுக்கு ஆளாகியுள்ள ஆட்களின் எண்ணிக்கை | | | |
| 24. | சட்டபூர்வமல்லாத நடவடிக்கைகள் அல்லது குற்றச் செயல்களின் எண்ணிக்கை | | | |

* அடிப்படை ஆண்டு :- நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்க முன்னைய அண்மித்த இற்றைப்படுத்தப்பட்ட தரவு

* குறித்த ஆண்டு :- நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு அல்லது மதிப்பீடு செய்யப்படுகின்ற ஆண்டு பற்றிய தரவுகள்

## சமுதாய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டம் - செயற்திட்டத்தின் மாதிரி அமைப்பு

| பிரதான பக்கத் தோற்றப்-பாடுகள் | கருத்திட்டம் / செயற்பாடு | இலக்குக் குழு | KPI சுட்டி | அடிப்படையாக கொள்ளும் ஆண்டின் பெறுமானம் | பூர்த்தி செய்ய எதிர்-பார்க்கும் இலக்கு |
|---|---|---|---|---|---|
| 1. கல்வி | I. உயர் கல்விக்கு இளம் மாணவர்கள் (பெண்கள் / ஆண்கள்) எண்ணிக்கையை அதிகரித்தல்) | பாடசாலை மாணவர்கள்<br><br>பெரியவர்களான மக்கள் | உயர்கல்வியில் ஈடுபடுகின்ற மாணவர்களின் விகிதம் %<br>எழுத்தறிவு மட்டம் | | |
| | II. பெரியவர்களின் எழுத்தறிவு மட்டத்தை மேம்படுத்தல் | கிராமத்தில் உள்ள சகல மக்களும் | வாசகர் கழகங்களின் எண்ணிக்கை | | |
| | III. வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக வாசிப்பு நூலகங்களை தாபித்தல் | க.பொ.த (சா/த) க.பொ.த. (உ/த) மாணவர் சமுதாயம் | தொழில் கல்வியில் ஈடுபட்டுள்ள இளம் மாணவர்களின் எண்ணிக்கை | | |
| | IV. தொழில் கல்வியில் ஈடுபட்டுள்ளவர்களை அதிகரித்தல் | கிராமிய மக்கள் | பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்கின்ற மாணவர் சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்-திட்டங்களின் எண்ணிக்கை | | |

| பிரதான பக்கத் தோற்றப்-பாடுகள் | கருத்திட்டம் / செயற்பாடு | இலக்குக் குழு | KPI சுட்டி | அடிப்படையாக கொள்ளும் ஆண்டின் பெறுமானம் | பூர்த்தி செய்ய எதிர்-பார்க்கும் இலக்கு |
|---|---|---|---|---|---|
| 2. சுகாதாரம் | சுற்றாடல் மற்றும் நல்ல சுகாதார பழக்க வழக்கங்களில் மக்களை ஈடுபடுத்தல்<br>I. சுத்தமான நீரைப் பயன்படுத்துவதில் மக்களை ஈடுபடுத்தல்<br>II. துப்பரவேட்பாட்டு / மலசலகூட வசதிகளை மேம்படுத்துவதற்கு மக்களை வழிநடாத்தல்<br>III. பெண்கள் மற்றும் சிறுவர் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வூட்டல்<br>IV. இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கான சுகாதாரம் பற்றி விழிப்புணர்வூட்டல்<br>தொற்றாத நோயை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல்<br>நோய்களை இனங்காண்பதற்கு மக்களை வழிநடாத்தல்<br>விசம் அற்ற உணவுகளுக்கு மக்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்<br>போதை வஸ்து ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்<br>விளையாட்டு மற்றும் உடல் நலன் தொடர்பில் கவனம் செலுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்<br>திடீர் விபத்துக்கள் பற்றி மக்களை விழிப்புணர்வூட்டல் | கிராமிய மக்கள் | சுத்தமான நீரை பயன்படுத்தும் வீட்டு அலகுகளின் எண்ணிக்கை<br>நிரந்தர மலசலகூடங்களை பயன்படுத்தும் வீட்டு அலகுகளின் எண்ணிக்கை<br>பிறப்பு விகிதம்<br>தாய் மரண விகிதம்<br>குறைந்த நிறையுடன் பிறக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை<br>20 வயதுக்கு குறைவான கர்ப்பமடைவோரின் எண்ணிக்கை<br>தொற்றாத நோய்களுக்கு ஆளாகும் விகிதம் | | |

| பிரதான பக்கத் தோற்றப்-பாடுகள் | கருத்திட்டம் / செயற்பாடு | இலக்குக் குழு | KPI சுட்டி | அடிப்படையாக கொள்ளும் ஆண்டின் பெறுமானம் | பூர்த்தி செய்ய எதிர்-பார்க்கும் இலக்கு |
|---|---|---|---|---|---|
| 3. பொருளாதாரம் | 1. தொழில் முயற்சிகளை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல் (சுயதொழில் வாய்ப்புகளை அறிமுகம் செய்தல்)<br>2. சேமிப்பு பழக்கத்தை அறிமுகம் செய்தல், காப்புறுதி திட்டங்கள் பற்றிய புரிந்துணர்வை பெற்றுக்கொடுத்தல்<br>3. உற்பத்தித்திறன் எண்ணக்கருவை அமுல்படுத்துவதன் ஊடாக மாத்திரம் உச்சளவாக வளங்களை பயன்படுத்துவதற்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்-திட்டங்களை அமுல்படுத்தல் (விரயத்தைக் குறைத்தல், எரிபொருளை உச்சளவில் வினைத்திறனுடன் பயன்படுத்தல், உயிர் வாயு அலகுகள்)<br>4. முதலீடு செய்வதில் மக்களை ஈடுபடுத்தல் உதா: வர்த்தகப் பயிர்ச் செய்கை | கிராமிய சமுதாயம்<br><br>இளம் தொழில் முயற்சியாளர்கள்<br><br>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் முயற்சியாளர்கள் | குடும்பத்தின் சராசரி வருமானத்தை மேம்படுத்தும் விகிதம்<br><br>புதிய தொழில் உருவாக்கத்தின் எண்ணிக்கை<br><br>புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை<br><br>வர்த்தகப் பயிர் செய்கையில் ஈடுபடுத்தப்-பட்டுள்ள எண்ணிக்கை | | |

| பிரதான பக்கத் தோற்றப்-பாடுகள் | கருத்திட்டம் / செயற்பாடு | இலக்குக் குழு | KPI சுட்டி | அடிப்படையாக கொள்ளும் ஆண்டின் பெறுமானம் | பூர்த்தி செய்ய எதிர்-பார்க்கும் இலக்கு |
|---|---|---|---|---|---|
| 4. நடைமுறை மற்றும் சமூக நிலைமை | 1. ஐவித எண்ணக்கருவின் கீழ் வீட்டின் சமையலறை, படுக்கையறை, இருக்கையறை, வீட்டுத்தோட்டம் போன்ற இடங்களை பயன்படுத்துவதற்கு மக்களை வழிநடாத்தல்<br>2. 3R எண்ணக்கருவை அமுல்படுத்துவதற்கு மக்களை விழிப்புணர்வூட்டல் (நேர முகாமைத்துவம்)<br>3. வீட்டுத்தோட்டத்தை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கு விழிப்புணர்வூட்டல் | சகல வீட்டு அலகுகளும் | உற்பத்தித் திறன் எண்ணக்கருவை அமுல்படுத்தும் வீட்டு அலகுகள்<br><br>வீட்டுத் தோட்டங்களைக் கொண்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | | |

| பிரதான பக்கத் தோற்றப்பாடுகள் | கருத்திட்டம் / செயற்பாடு | இலக்குக் குழு | KPI சுட்டி | அடிப்படையாக கொள்ளும் ஆண்டின் பெறுமானம் | பூர்த்தி செய்ய எதிர்பார்க்கும் இலக்கு |
|---|---|---|---|---|---|
| 5. கலாசாரம் மற்றும் ஆன்மீக நடைமுறைகள் | 1. ஆன்மீக, கலாசார மற்றும் சமய நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல் (தர்ம உரை, தர்ம கலந்துரையாடல்கள் போன்றன) | கிராமிய சமுதாயம் | ஆன்மீக மற்றும் கலாசார மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | | |
| | 2. பிரதேசத்தில் காணப்படுகின்ற பாரம்பரிய கலாசார நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்வதும் ஒழுங்கு செய்வதும் | இளைஞர் யுவதிகள் | உருவாக்கப்பட்ட நாடகங்கள், இலக்கிய ஆக்கங்கள் மற்றும் வேறு ஆக்கங்களின் எண்ணிக்கை | | |
| | 3. இலக்கிய கலை ரசனைக்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல் | சிறுவர் பரம்பரை | | | |

# 12 1.பயன்படுத்தக்கூடிய உற்பத்தித்திறன் கருவிகள்

## 12.1 பலம் பலவீனம் வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் (SWOT) பகுப்பாய்வு

இது ஒரு நிறுவனம், இயக்கம், அமைப்பு அல்லது ஆளொருவர் பற்றி மேற்கொள்ளும் பகுப்பாய்வாகும். ஏதேனும் ஒரு நிறுவனம் அமைப்பு அல்லது ஆளொருவர் ஒரு நோக்கத்தை மையமாகக் கொண்டு பயணிக்கும்போது தம்மிடம் இருக்கின்ற பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றி பகுப்பாய்வு செய்வது முக்கியமாகும் என்பதுடன் அதனூடாக குறித்த நோக்கத்தை நோக்கி பயணிப்பது மிகவும் இலகுவானதாக அமையும். இங்கு தாம், தமது நிறுவனம் அல்லது அமைப்புக்கு உரித்தான பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பட்டியல்படுத்திக் கொள்ள முடியும்.

| **பலம் (Strength)** | **பலவீனம் (Weaknesses)** |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| **வாய்ப்புக்கள் (Opportunities)** | **அச்சுறுத்தல்கள் (Threats)** |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

பலம் மற்றும் பலவீனங்கள் தாம் அல்லது நிறுவனத்தில் காணப்படுகின்ற உள்ளக காரணிகளாக இருப்பதுடன் சந்தர்ப்பங்கள் வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தமக்கும் தமது நிறுவனத்திற்கும் வெளியே இருந்து தமக்கு அல்லது தமது நிறுவனம் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகளாக உள்ளன.

உங்களிடம் அல்லது நிறுவனத்திற்கு உரித்தானதாக உள்ள பலங்களை மென்மேலும் வளர்த்துக் கொண்டு உங்களின் நிறுவனத்தில் காணப்படுகின்ற

பலவீனங்களை தவிர்த்துக் கொண்டு உங்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்புக்களை முறையாக பயன்படுத்தி உங்களுக்கு எதிராக காணப்படுகின்ற அச்சுறுத்தல்களை சரியான முறையில் எதிர்கொண்டு சவால்களை வெற்றிகரமாக வென்றெடுத்து உங்களின் நோக்கங்களை நோக்கி முறையாகப் பயணிக்கப் பொருத்தமான உபாயமுறைகளையும் முறையியல்களையும் இனங்காண செயற்பட வேண்டும்.

## 12.2 முன்னேற்ற பரிசோதனை அட்டவணை (Check Sheet)

- சாதாரணமாக தரவுகளைக் குறித்துக் கொள்ளல் மற்றும் தரவுகள் விடுபடுவதைக் குறைத்துக் கொள்வதற்காக இது பயன்படுத்தப்படுகின்றது.


- குறிப்பிட்டதொரு பயனற்ற பெறுபேறுக்கு காரணமாக அமைகின்ற சிக்கல்களை கண்டறிவதற்காக பயன்படுத்திக்கொள்ள முடியும்.

<table>
<tr><th colspan="10">Check Sheet of Reworked Jobs</th></tr>
<tr><th rowspan="2">Deptt</th><th colspan="9">Weeks</th></tr>
<tr><th>No.1</th><th>No.2</th><th>No.3</th><th>No.4</th><th>No.5</th><th>No.6</th><th>No.7</th><th>No.8</th><th>Total</th></tr>
<tr><td>11</td><td></td><td>|</td><td></td><td>||</td><td></td><td>|</td><td></td><td></td><td>4</td></tr>
<tr><td>66</td><td>|</td><td></td><td>|</td><td></td><td>||</td><td></td><td>||</td><td>|</td><td>7</td></tr>
<tr><td>55</td><td>|||</td><td>|</td><td>||</td><td>||</td><td>|</td><td>卌</td><td>||</td><td>||||</td><td>20</td></tr>
<tr><td>22</td><td>|</td><td>||</td><td></td><td>|||</td><td>||</td><td></td><td>|</td><td>|</td><td>10</td></tr>
<tr><td>Others</td><td></td><td></td><td>|</td><td></td><td>|</td><td></td><td>||</td><td></td><td>4</td></tr>
</table>

## 12.3 ஹிஸ்டோகிராம் வரைபு (Histogram)

- தரவுகள் பரந்துள்ள முறை பற்றி புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனை தரநியமங்களுடன் ஒப்பிடுவதற்காக.


- முன்னுரிமை சிக்கல்கள் மற்றும் காரணங்களை இனங்காண்பதற்காக பயன்படுத்தப்படும்.



## 12.4 கட்டுப்பாட்டுக் குறிப்புக்கள் (Control Chart)

- ஏதேனும் ஒரு செயற்பாடு அல்லது விடயம் இடம்பெற வேண்டிய மிகவும் நல்ல மட்டத்தை தீர்மானிப்பதற்காக நல்ல மட்டத்திற்கு வெளியே இடம்பெறுகின்ற பெறுபேறுகளின் மட்டங்களை வரையறைகளுக்கு கொண்டு வருவதற்கு முயற்சிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய பாதிப்புக்களை இனங்கண்டு அதற்கான பரிகாரங்களை மேற்கொள்ள முடியுமாகும்.


- ஏதேனும் ஒரு செயன்முறை நிலையானதா இல்லையா என்பதை கண்டறிவதற்காக




## 12.5 பரேட்டோ வரைபு (Pareto Diagram)

- ஏதேனும் ஒரு சிக்கலுக்கு காரணமாக அமைகின்ற முக்கிய காரணிகளை இனங்காண்பதற்காக பரேட்டோ வரைபு பயன்படுத்தப்பட முடியும்.


- இதன் கோட்பாடாக இருப்பது ஏதேனும் ஒரு சிக்கலில் 80%ஐ தீர்ப்பதற்காக தாக்கம் செலுத்துகின்ற 20%மான முக்கிய காரணங்கள் மாத்திரமாகும்.



## 12.6 பெறுபேறுகள் மற்றும் விளைவுகள் பற்றிய வரைபடம் (Cause & Effect Diagram)

- ஏதேனும் ஒரு பயனற்ற விளைவை ஏற்படுத்தக் காரணமாகின்ற முக்கிய காரணிகள் மற்றும் உபகாரணிகளை பகுப்பய்வு செய்வது இங்கு இடம்பெறுகின்றது. இதன்மூலம் ஏதேனும் ஒரு காரணத்திற்கு தாக்கம் செலுத்துகின்ற தாக்கம் செலுத்தக்கூடிய காரணிகள் பற்றி ஆராயப்படுவதுடன் இதற்காக குழுவினுள் சிந்தனைக் கிளறலை மேற்கொள்ளல் வேண்டும்.


- இங்கு பிரதானமாக ஆறு துறைகளின் கீழ் உப காரணிகள் பற்றி ஆராயப்படும். அவை 5MIE என்று அழைக்கப்படும்.




## 12.7 ஆங்காங்கே பரந்துள்ள வரைபடம் (Scatter Diagram)

- இரண்டு புள்ளிகளுக்கிடையே தொடர்புகள் உள்ளனவா என்பது பற்றி ஆராய்வதற்கு

- இது சாதகமானதாக அல்லது பாதகமானதாக இருக்க முடியும். உதாரணம்: விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல்



## 12.8 தரவுகளை வகைப்படுத்தல் (Data Stratification)

தரவுகள் பல்வேறு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு அந்த தரவுகளின் விசேட தொடர்புகள் காணப்படுகின்றனவா என்பதை ஆராய்வதற்கு இந்த முறை பயன்படுத்தப்படுவதுடன் தரவுகளின் அளவு அதிகரிக்கும்போது அதன் சரியான தன்மையும் அதிகரிக்கும்.

உதாரணமாக:
- பிரிவுகளுக்கமைய
- அலுவலர்களுக்கமைய
- கால அட்டவணைகளுக்கு அமைய
- சுற்றாடல் நிலைமைகளுக்கு அமைய
- பால்நிலை அடிப்படையில்
- வயதின் அடிப்படையில்

## 12.9 சிந்தனைக் கிளறல் (Brain Stroming)

ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்காக மிக வெற்றிகரமான முறையொன்றாக 1939ஆம் ஆண்டில் அலெக்ஸ் எப் ஒஸ்போர்ன் (Alex F. Osborn) இதனைப் பயன்படுத்தியிருக்கின்றார்.

- ஆரம்ப சந்தர்ப்பத்தில் சிந்தனைக் கிளறலின் மூலம் பரிகாரம் அல்லது தீர்வுகளை பெற்றுக்கொள்ள வேண்டிய பல பிரச்சினைகள் இனங்காணப்படுகின்றன.

- ஒரே சந்தர்ப்பத்தில் சகல சிக்கல்களுக்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வது கடினமானதாகும்.

- முதலில் ஒரு பிரச்சினை அல்லது இரண்டு பிரச்சினைகள் தேர்ந்தெடுக்கப்படும். அவ்வாறு தேர்ந்தெடுப்பது அங்கத்தவர்களின் ஏகமனதான அல்லது பெரும்பான்மையானோரின் கருத்துக்களின் மூலம் தீர்மானிக்கப்பட முடியும்.

- இந்த முன்னுரிமைப்படுத்தலை தீர்மானிக்கும்போது,
  சிக்கலின் தன்மை
  அது ஏற்படுத்துகின்ற தாக்கம்
  அது ஏற்படுத்தப்படுகின்ற தடவைகளின் எண்ணிக்கை
  மிக விரைவில் தீர்வை தீர்த்துவைக்க வேண்டியதன் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் பற்றி கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**சிந்தனைக் கிளறலின்போது நீங்கள் பின்பற்ற வேண்டிய முக்கிய விடயங்கள்**

- ◆ அமைதியான சுதந்திரமான சூழலைத் தேர்ந்தெடுத்தல்.

- ◆ சகல அங்கத்தவர்களையும் அதில் பங்கேற்கச் செய்தல்

- ◆ சிக்கலுக்குக் காரணமான விடயங்கள் பற்றிய பல்வேறு கருத்துக்களையும் பெற்றுக்கொள்ளல். இங்கு கிடைக்கின்ற சகல கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வதும் ஒரு கருத்து அல்லது எந்தவொரு கருத்தையும் விமர்சிக்காதிருப்பதற்கு பொறுப்புடன் செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

## 12.10. இலக்குக் குழுக்களின் கலந்துரையாடல் (Focus Group Discussion)

இலக்குக் குழுவொன்றை தேர்ந்தெடுத்து அவர்களின் கருத்துக்கள், எண்ணங்கள், நம்பிக்கைகள், பொருட்கள், சேவைகள் பற்றிய கருத்துக்கள், மனப்பாங்குகள் போன்றன தொடர்பில் கேள்வி எழுப்புகின்ற ஆய்வு ரீதியான முறையாகும். இங்கு கேள்விகளை ஏற்றல், கருத்துக்களை பெற்றுக்கொள்ளல், தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவுடன் நட்புறவுடனும் சுதந்திரமாகவும் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளக்கூடியதொரு சூழலை கட்டியெழுப்ப வேண்டுமென்பதுடன் அவ்வவ் ஆட்களின் கருத்துக்கள் தொடர்பில் அழுத்தம் கொடுக்கக்கூடாது.

கலந்துரையாடலின்போது சகல முக்கிய தகவல்களையும் குறித்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறே மிகவும் விளைதிறன்மிக்க மற்றும் சரியான பலம்மிக்க கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக இலக்குக் குழுக்களை தேர்ந்தெடுக்கும்போது மிகச்சரியான ஆட்களை குழுக்களில் உள்ளடக்குவதற்கு மிகக் கவனமாக செயற்பட வேண்டும். அவ்வாறே குறித்த கலந்துரையாடலுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை தீர்மானித்தல் மற்றும் உரிய வெளிப்படையான கேள்விக் கொத்தொன்றை தயார்செய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

❄❄❄

செல்லுங்கள் அவர்களிடம்...

இனங்காணுங்கள் அவர்களுக்கு உரித்தானதை

புத்தெழச் செய்யுங்கள் அவர்களிடம் உள்ளவற்றை...

பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளுங்கள்

பலப்படுத்துங்கள், பலவீனங்கள் எழலாம்

அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

பலம்மிக்க ஒரு தலைவராக நோக்கங்களை

நிறைவேற்றிக்கொள்ளும்போது,

அவரைப் பின்பற்றுவோர் அதனைக் காண்பது

“இதனை நாம் செய்தோம்” என்றே ஆகும்...

❄❄❄